# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்

மாத வெளியீடு

ஆசிரியர்: பி. சே. மாணிக்கவாசக முதலியார்.

| தொகுதி—அ | பவ௵ மார்கழி௴ | பகுதி கஉ |
|---|---|---|


## உள்ளடக்கம்


பத்திரிகாசிரியர் முன்னுரை ... 686
பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டி அறிக்கை ... 695
தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு ... 701
கனகவல்லியின் காதல் ... 707
ஸ்தல ஸ்தாபனத் தேர்தலில் செங்குந்தர் வெற்றி ... 710
குஞ்சிதபாத தரிசனம் ... 712
காங்கிரஸ் வாதிகளுக்கோர் வேண்டுகோள் ... 713
விகடத் துணுக்குகள் ... 715
எனது அதிர்ஷ்டம் ... 717
இளம்பூரணன் ... 719
நாகரிகம்: பழையனவும், புதியனவும் ... 724
முன்னேற்றமா? பின்னேற்றமா? ... 728
செங்குந்த யாத்திரைவாசி ... 730
இலங்கையில் செங்குந்தர் எப்போது குடியேறினர்? ... 732
வர்த்தமானம் ... 734
கிளர்ச்சி ... 739
அதிக எழுத்துப் போட்டி—முடிவு .... 741
ரொக்கப் பரிசு ரூ. 250 .... 743

உ

ஓம்

# பத்திரிகாசிரியர் முன்னுரை

சிரத்தா ளத்திற் பணியாதே
 செகத்தோர் பற்றைக் குறியாதே
வருத்தா மற்றொப் பிலதான
 மலர்த்தாள் வைத்தெந் தனையாள்வாய்
நிருத்தா கர்த்தத் துவநேசா
 நினைத்தார் சித்தத் துறைவோனே
திருத்தாள் முத்தர்க் கருள்வோனே
 திருக்கா ளத்திப் பெருமாளே.

—ஸ்ரீ அருணகிரிநாதர்.

## நமது ஐந்தாவது மகாநாடு
## அடுத்த மாதத்தில் நடைபெறுகின்றது

ஒரு வருட காலமாய் மிகுந்த ஆர்வத்தோடு செங்குந்த உலகம் எதிர்பார்த்திருந்த நமது ஐந்தாவது மகாநாடு அடுத்த மாதம் நடைபெறப்போகின்ற தென்னும் நற்செய்தியினைக்கேட்டு, குலாபிமானிகளது உள்ளங்களில் இன்பமும் மகிழ்ச்சியும் வரம்பிலாது ஊற்றெடுத் தோடு மென்பதில் சற்றும் சந்தேகமில்லை. குலாபிமானச் செல்வர்கள் ஒருங்கே கூடி அளவளாவுதற்கும், குல முன்னேற்றத்திற் கவசியமான சீர்திருத்தங்களை ஆராய்வதற்கும், நமது குல மக்களிடையே ஒற்றுமை யுணர்ச்சி ஓங்கி வளர்வதற்கும் மகாநாடுகள் ஆண்டு தோறும் தவறாது நடைபெறவேண்டியது மிகமிக அவசியமாகும். என்றாலும், எதிர்பாராத சில இடையூறுகளால் கடந்த ஓராண்டாக ஒத்திவைக்கப்பட்டு வந்த நமது ஐந்தாவது மகாநாடு, நாளது தை மாதம் 13, 14-ம் நாட்களில் (26, 27-1-35) ஒத்திவைக்கப்பட்டதின் பலன்களும் சேர்ந்து விளங்க, வெகு சிறப்பாகவும், நேர்மையாகவும் நடைபெறு மென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இம் மகாநாட்டுப் பேச்சு இரண்டு வாரங்களின் முன்புதான் எழுந்தது. உடனே, வரவேற்புக் கழகம் அமைக்கப் பட்டு மகாநாட்டு வேலைகள் வெகு துரிதமாகச் செய்யப் பெற்று வருகின்றன. வடார்க்காடு ஜில்லா, நம்மவர்கள் நிறைந்து பெருங்கூட்டமாக வதியும் ஜில்லா வாகலானும், நம்மரபைச்



சார்ந்த செல்வாக்குடையபல செல்வவான்கள் இந்த ஜில்லாவில் இருக்கின்றமையானும், பொது நல சேவையில் நிறைந்த அனுபவமும், தாராள நோக்கமும், தளராத ஊக்கமுமுடைய கண்ணியம் வாய்ந்த குலாபிமானச் செல்வர்கள் பலர் வரவேற்புக் கழக நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளமையானும் மகாநாடு எல்லா வகையிலும் ஒழுங்காகவும், சிறப்பாகவும் நடைபெறு மென்று உறுதியாய்க் கூறலாம்.

மகாநாடு சிறிது காலந்தாழ்த்து நடைபெற நேர்வதில் செங்குந்தர்களிடையே எத்தகைய அன்பும் ஆர்வமும், ஊக்கமும் உற்சாகமும் பொங்கிப் பெருகுகின்றன வென்பது, ஆங்காங்குள்ள அன்பர்கள் தமக்கனுப்பப்பெற்ற விளம்பர சபையாரின் பிரசுரங்களையும், தினசரிகளில் வெளியிடப்பெற்ற அறிக்கைகளையும் கண்டதும் மகிழ்ச்சிக் கடிதங்களும், ஆலோசனை நிருபங்களும் நமக்கு அனுப்பி வருவதிலிருந்து நன்கு விளக்கமாகின்றது. தினந்தோறும் வருகின்ற அளவற்ற இத்தகைய கடிதங்களைப் பார்க்கும்போது இம் மகாநாட்டிற்குச் செங்குந்தர்கள் பெருவாரியாகத் திரண்டு வருவார்களென்றும், முக்கியமான பல தீர்மானங்களைக் கொணர்ந்து வாதிப்பார்களென்றும் தெளிவாய்ப் புலனாகின்றது.

வடார்க்காடு ஜில்லாவின் சார்பில் நடைபெறும் இவ்வைந்தாவது மகாநாடு, அந்த ஜில்லாவிற்குள் சமயாசாரியர்களால் தேவாரம் பாடப்பெற்ற மேன்மை யுடையதும், ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகள் ஆண்பனையைப் பெண்பனையாக மாற்றப் பெற்ற பெரும்பேறு வாய்க்கப் பெற்றதும், நமது சமூகத்தினர் பெருங்கூட்டமாக வதிகின்ற சிறப்பினை யுடையதும், சேயாற்றின் கரைப் பாங்கர் விளங்குவதால் நீர்வளம் நிரம்பப் பெற்றதுமான திருவோத்தூர் என்னும் திவ்விய திருப்பதியில் நடைபெற நேர்வது குறிப்பிடத் தக்கதோர் விசேஷமாகும்.

இதுவரை கிடைத்துள்ள கடிதங்களிலிருந்தும், கடந்த நான்கு மகாநாடுகளின் அனுபவங்களி லிருந்தும் இரண்டு முக்கியமான—மிகவும் அவசியமான ஏற்பாடுகள் இம்மகாநாட்டில் செய்யப்படவேண்டியது நேர்மையாகுமெனக் கருதுகின்றோம். அவைகள் பெண்மணிகளைப் பற்றியதும், மகாநாட்டு நடைமுறைகளைப் பற்றியதுமே யாகும்.

மாதர் மகாநாடொன்று கூட்ட வேண்டுமென கடந்த மகாநாட்டுச் சமயம் பல அன்பர்கள் வேண்டிக்கொண்டது போன்றே, இந்தச்சமயத்திலும் கடித மூலமாகவும், நேரிலும்

நமக்கு அனேகர் அறிவித்து வருகின்றனர். தினசரிகளிலும் இது சம்பந்தமாகப் பலர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். குல முன்னேற்றத்தில் நிறைந்த ஆர்வமுடைய இத்தகைய அறிஞர்களை ஒவ்வொரு மகாநாட்டிலும் சமாதானத்தோடு திருப்தி யடையுமாறு செய்வது நேர்மையாகாதெனக் கருதியே இம்மகாநாட்டின் ஆரம்பக் கூட்டத்தில் இது பற்றிய யோசனை செய்ததுண்டு. நீண்ட ஆலோசனையின் பின் மாதர் மகாநாடு தனியே கூட்டப்படுவதற்குரிய சௌகரியங்கள் இந்த ஜில்லாவில் இல்லை என்ற முடிவுக்கு வர நேர்ந்த தென்றாலும், பெண்கள் சம்பந்தமான தீர்மானங்களின்மீ தெழுகின்ற விவாதங்களில் பெண்களும் கலந்துகொண்டு தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்குமாறு தக்க ஏற்பாடுகள் செய்வதென முடிவு செய்யப்பெற்றிருக்கிறது. எனவே, மாதர்களின் முன்னேற்றத்தில் ஆர்வமுடையவர்களனைவரும் தம்முடன் பெண்களைத் தவறாது கூட்டிவர வேண்டுமென்றும், கல்வியறிவு வாய்க்கப்பெற்ற பெண்மணிகளை மகாநாட்டு நடவடிக்கைகளில் கலந்துகொண்டு தீர்மானங்களின் வாதப்பிரதி வாதங்களில் தமது அபிப்பிராயங்களைத் தாராளமாய் அறிவிக்குமாறு செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறோம். இம்மகா நாட்டில்இது பூர்த்தி செய்யப்படுமானால், திருநெல்வேலி ஜில்லாவில் அடுத்த ஆண்டு நிகழப்போகும் மகாநாட்டில் மாதர் மகாநாட்டைக் கூட்டுவதற்கு இயலுமென்றும், அவ்வாறே கூட்டிவைக்க முயற்சிக்கின்றோமென்றும் உறுதி கூறுகின்றோம்.

பெண்களைப்பற்றி செய்யப்பெறும் இவ்வேற்பாட்டைப் போலவே, மகாநாட்டு நடை முறையிலும் அவசியமான ஒரு மாறுதல் செய்யவேண்டியது இன்றியமையாத தாகின்றது. மகாநாட்டு முதல் நாள் முழுதும், வரவேற்புத் தலைவர்களுடையவும், திறப்பாளர்களுடையவும் உபந்யாசங்களைப் படிப்பதற்கே செலவழிக்கப் பெறுவது வழக்கமாயிருப்பதால் பிரதிநிதிகளுக்குச் சிறிது உற்சாகம் குன்ற, அன்றே தமது திரும்பும் பிரயாணத்தைச் சிலர் தொடங்கி விடுகின்றனர். அதனால், இரண்டாம் நாளில் நிறைவேற்றப் பெறும் தீர்மானங்கள் முழுப்பலன் தருவனவாக இல்லை. அன்றியும், சிறந்த அறிவாளிகள் பலர் மகாநாட்டில் பேசுவதற்குரிய சந்தர்ப்பம் பெறுவதில்லை. பெற்றவர்களும் தடையின்றி தாராளமாய்ச் சில நிமிடநேரமாவது தமது அபிப்பிராயங்களை வெளியிட அவகாசம் வாய்க்கப் பெறுவதில்லை. இக்குறையும் இம்மகா நாட்டில் நேரக்கூடாதென எண்ணியே சமூக,



வர்த்தக. வாலிபர் மகாநாடுகட்கு வழக்கம்போல் தனித்தனி திறப்பாளர்களை நேமிக்காது பொதுவாகத் திறப்பாளர் ஒருவரையே தெரிந்தெடுக்கவும், வரவேற்பு உரைகள் மிகச் சுருக்கமாக இருக்கவும் ஏற்பாடு செய்து, முதல் நாள் பிற்பகல் கூட்டத்திலேயே தீர்மானங்களைப் பகிரங்க விவாதத்திற்குக் கொண்டு வருவதென உறுதிகொண்டுள்ளோம். முழுதாக ஒன்றரை தினங்கள் தீர்மானங்களை வாதிப்பதற்கெனவே ஒதுக்கப்படப் போவதால், ஒவ்வொரு தீர்மானத்தின் மீதும் அறிஞர்கள் பலர் தமது கருத்துக்களைத் தெளிவாய் விளக்கிக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்குமென்றும், நமது குல மகாத்மா அவர்களும், வள்ளலார் அவர்களும் தங்கள் உயரிய உபதேசங்களைப் பன்முறை வெளியிடுவதற்கு அரிய சந்தர்ப்பங்கள் பல நேருமென்றும், அவசியமான தீர்மானங்களெவையும் விவாதமின்றி தலைவர் பிரேரணையின்மீது நிறைவேற்ற வேண்டிய அவசியம் ஏற்படாதென்றும் நம்புகின்றோம். ஆகவே, மகாநாட்டின் ஆலோசனைக்காக அவரவர் கொண்டு வர விரும்பும் தீர்மானங்களை ஜனவரி மாதம் 10-ந்தேதிக்குள் வரவேற்புக் கழகப் பொதுக்காரியதரிசியவர்களுக்கு அனுப்பித் தருவார்களாக.

முதல்நாள் பிற்பகலிலேயே தீர்மானங்கள் பகிரங்க மகாநாட்டிற்குக் கொண்டுவரச் செய்வதும், அவற்றின் வாதப் பிரதிவாதங்களில் மாதர்களும் பங்குகொள்ளச் செய்வதும் இதுவே முதன்முறை யாதலால் இம்மகாநாடு ஒரு தனிச் சிறப் பெய்துமென் றெண்ணுகின்றோம்.

செங்குந்தர்கள் பொதுவாகத் தங்கள் வருட விடுமுறையாகக் கருதி ஓய்வு கொள்ளும் சமயத்தில், அதாவது பொங்கலின் பின் சில நாட்களுக்குள் இம்மகாநாடு நடக்கப்போவதால் செங்குந்தர் பெருங்கூட்டமாகத் திரண்டு வரக்கூடுமென வரவேற்புக் கழகத்தினர் நம்புகின்றனர். ஆங்காங்கிருந்து வரும் செய்திகளும் இதனை வலியுறுத்துகின்றன. ஆகவே, ஐயாயிரம் பிரதிநிதிகள் வரையில் தங்குவதற்கான இடவசதி செய்ய வரவேற்புக் கழகத்தார் முடிவு செய்திருக்கிறார்கள்.

அன்றியும், இம்மகாநாட்டில் மூன்று வருடங்கட் கொருமுறை நடைபெற வேண்டிய தலைச்சங்க நிர்வாக அங்கத்தினர்களின் தேர்தல் நடைபெற நேர்வது மற்றுமோர் சிறப்பேயாகும்.

செங்குந்தப் பெருமக்களனைவரும் பல்லாயிரவராகத் திரண்டு வந்து சகோதர வாஞ்சை பெருகவும், சமூக சேவை வெகு விரைவில் நற்பயனளிக்கவும், நமது மகாநாட்டுப் பெரு

முழக்கம் உலகமுற்றும் பரவியுள்ள செங்குந்தரனைவரையும் விழித்தெழச் செய்து குலத் தொண்டும், தேசப்பணியும் புரிய தம்மை அர்ப்பணம் செய்துகொள்ளுமாறு தூண்டவும் நற்றுணையாக நிற்பார்களென்பது எமது நம்பிக்கை.

நமது எண்ணங்கள் நிறைவேறத் திருவருள் சுரக்குமாறு முழுமுதற் செழுஞ்சுடரை வழுத்தி இறைஞ்சுவோமாக.

## கிளைச் சங்கங்கள் கவனிக்க வேண்டுகிறோம்

இதே தலைப்புடன் கடந்த பிப்ரவரி மாத இதழில் நாம் ஒரு குறிப்பு வெளியிட்டிருந்ததை அன்பர்கள் கவனித்திருப்பார்களென எண்ணுகின்றோம். ஐந்தாவது மகாநாடு தை மாதம் 13, 14-ம் நாட்களில் நடைபெற உறுதி செய்யப்பெற்று வேலைகள் வெகு தீவிரமாய் நடைபெற்று வருகின்றன. மகாநாட்டுச் சமயம் தலைச்சங்கத்தின் பொதுக்கூட்டம் நடைபெறுவதும் அதன் அறிக்கை அக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் பெறுவதும் வழக்கமா யிருந்துவருகின்றது. அதே முறையில் தலைச்சங்கத்தின் ஆறுவது பொதுக்கூட்டம் இம் மகாநாட்டின் இரண்டாம் நாள் பகல் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அச் சமயம் சமர்ப்பிக்கப் படவேண்டிய தலைச்சங்க அறிக்கையில் கிளைச் சங்கங்களின் முழு விவரமும் வெளியிடுவதென முடிவு செய்யப்பெற்றிருப்பதால் ஒவ்வொரு கிளைச்சங்கமும் கீழக் குறிக்கப் பெற்றுள்ள விவரங்களைக் குறித்து 15-1-35-ந் தேதிக்குள் கிடைக்குமாறு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

(1) கிளைச் சங்கங்கள் ஸ்தாபிக்கப் பெற்றது முதல் 31-12-34 வரை ஆற்றிய நடவடிக்கைகளின் சுருக்கமான வரலாறு ;

(2) அவற்றின் தற்கால நிர்வாக உறுப்பினர்களின் பெயர்களும், தலைவர்கள் காரியதரிசிகளின் முழு விலாசங்களும்;

(3) அவற்றின் சார்பாக வாசகசாலை, நூற்குழுமம், பாடசாலை, மாணவர் கழகம், தொண்டர்படை, உடற்பயிற்சிக் கழகம் ஆகிய ஏதாவது விசேஷ பிரிவுகள் நடத்தப்பெற்று வரின் அவற்றின் சுருக்கமான விவரம்;

(4) தலைச் சங்கத்தின் கிளையாக அங்கீகரிக்கப் பெற்ற சங்கமா, அங்கீகரிக்கப் பெறாததா என்ற குறிப்பு;

(5) அங்கீகரிக்கப் பெற்றதாயின் கிளைச் சங்கக் கட்டணம் எத்தனை ஆண்டுகளுக்கு எவ்வளவு செலுத்தி யிருக்கின்றதென்பது ;



(6) தலைச் சங்கப் பொதுக்கூட்டத்திற்கும், மகாநாட்டிற்கும் தனித்தனி தேர்ந்தெடுத்துள்ள பிரதிநிதிகளின் பெயர்கள்.

இந்த விவரங்களைக் குறிப்பிட்ட தேதிக்குள் கிளைச்சங்கங்கள் அனுப்பாமல் தாமதம் செய்யுமாயின், தலைச்சங்கத்தின் அறிக்கைப் பத்திரம் தயாரித்தலும், பொதுக் கூட்டத்தின் அங்கத்தினர் ஜாபிதா தயாரித்தலும் தடைப்படு மாதலால் உடனே அனுப்பித்தருமாறு வேண்டுவதோடு, கிளைச்சங்க நிர்வாக உறுப்பினர்களடங்கிய படம் (Groupe Photo) இருக்குமாயின் ஒரு பிரதி அனுப்பிவைக்க வேண்டியதும் அவசியமாகும். இவைபற்றிய தனிக் கடிதங்கள் தலைச்சங்க அமைச்சரால் கிளைச்சங்கங்களுக்கு விரைவில் அனுப்பிவைக்கப் பெறுமென அறிகின்றோம். ஆகையால், அன்பர்கள் தாமதமின்றி உறங்கிக் கிடக்கும் சங்கங்களைப் புதுப்பித்தும், சங்கங்களில்லாத இடங்களில் புதிதாகத் தோற்றுவித்தும் தொண்டாற்றுவார்களாக.

## தலைச்சங்கத்தாருக்கு அரிய ஆலோசனை

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்நாட்டின் தொழிற்பெருக்கமே ஆதாரமாகும். ஒரு காலத்தில் இந்திய நாடு செழுமையும் கொழுமையும் பெற்றிருந்ததற்குக் காரணம் அக்காலத்திலிருந்த இந்திய நாட்டின் தொழிற் பெருக்கமன்றோ? இந்தியாவின் கைத்தொழில்களில் முதன்மை வாய்ந்தது நெசவுத் தொழிலே யாகும். கைத்தொழிலாளர்களில் பெரும்பாலோர் நெசவுத் தொழில் புரிகின்றவர்களே யாவார்கள். அதுவே இன்று பெரும்பாலான இந்தியர்களின் ஜீவாதாரத் தொழிலாக இருக்கின்றது. இத்தகைய ஜீவாதாரத் தொழிலானது இன்று அடைந்திருக்கும் நிலையினை நோக்கும்போது உண்மை இந்தியன் உள்ளம் வருந்தாதிருக்க முடியாது. 'இன்றோ, நாளையோ, இறந்துபடவே தேன்நாளோ' என்ற நிலையில், நெசவுத் தொழிலானது மறைந்துபடுவதற்குரிய வழியை நோக்கி வெகுவேகமாகப் பிரயாணம் செய்து வருகின்றதென்பதை, நெசவுத் தொழிலாளர் படுகின்ற துன்பங்களை நேரில் காணும் எவனும் நிச்சயிக்காமல் இருக்கமுடியாது. நெசவுத் தொழில் புரிவோர் எந்த வகுப்பினராயினும் அவர்கள் இன்று வருமானமின்றித் தவிப்பதையும், சிறிது சிறிதாக அத்தொழிலை மறந்து வேறு தொழிலைக் கைப்பற்றி வருவதையும் நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

வெளிநாட்டுப் போட்டிகள் ஒருபுறமும், இந்தியர்களின் அந்நிய ஆடை மோகம் மற்றொரு புறமும் நெசவுத் தொழிலை நசுக்கி வருகின்றன. கைத்தறி நெசவுத் தொழில் புரிகின்றவர்களே தம்மால் உற்பத்தி செய்யப்பெறும் ஆடைகளை விரும்பி அணிகின்றார்களில்லை. மேல்நாட்டு ஆடைகளின் பளபளப்பு சுதேச ஆடைகளிடத்து இவர்கள் கொண்டுள்ள விருப்பத்தை மாற்றிவிடுகின்றது. எனவே, நெசவுத் தொழிலில் சில மாறுதல்கள் செய்து தற்காலத்துக்கேற்ற வகையில் புதுப்பிக்க முயற்சி செய்யாதிருப்போமாயின், வெகு விரைவில் அத்தொழிலை மேற்கொண்ட சமூகத்தவர்களனைவரும் தொழிலற்றவர்களாய், வாழ்க்கைப் போராட்டத்தில் பெரிதும் கஷ்டப்பட நேருமென்பது நிச்சயம். இந்தியாவின் பெருமைக்கே அத்தொழிலின் அழிவு மீளமுடியாத ஒரு பெருந் தாழ்வை உண்டு பண்ணக்கூடும். இதனைக் கருதியே தேசிய புனருத்தாரணத்திற்காக உழைத்து வருகின்ற மகாத்மா காந்தியடிகள் போன்ற இந்திய மாதாவின் தவப் புதல்வர்கள் பலர், நெசவுத் தொழிலின் மேன்மையை மீண்டும் நிலைபெறுத்த முயற்சித்து வருகின்றார்கள். நெசவாளிகள் இந்தச் சமயத்தில் உறங்கிக் கிடப்பது நேர்மையாகாது.

கைத்தறி நெசவுத் தொழில் வரவரத் தேய்ந்து வருகின்றதென்பதை இந்திய அரசாங்கம் உணர்ந்து, அதன் அபிவிருத்திக்காக ஆண்டுதோறும் ஒரு பெருந் தொகையினைச் செலவிட முடிவு செய்திருக்கிறது. சென்னை மாகாணத்திலும் கைத்தறி நெசவுத் தொழிலைப் பரிசீலனை செய்ய விரைவில் முயற்சிகள் நடைபெறக்கூடும். அதன் பொருட்டுத் தனிக் கமிட்டிகள் அமைக்கப்படுமென்று கருதுகின்றோம். இச்சமயம் கைத்தறி நெசவுத்தொழில் புரியும் எல்லாச் சமூகத்தவர்களும் ஒன்றுபட்டுத் தமது குறைகளை வெளிப்படுத்த வேண்டியதும், தமது கஷ்ட நிவர்த்திக்காகப் பெருங்கிளர்ச்சி செய்யவேண்டியதும் மிகமிக அவசியமென்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

நமது ஐந்தாவது மகாநாடு அடுத்த மாதம் நடைபெறப் போகிறது. அச்சமயம் நெசவுத் தொழில்புரியும் எல்லாச் சமூகத்தவர்களின் முக்கியஸ்தர்களையும் தருவித்து, அகில இந்திய கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம் அமைப்பதற்குரிய முயற்சியினை தலைச்சங்கத்தினர் மேற்கொள்ள வேண்டுமென நாம் வற்புறுத்துகிறோம். இது பற்றி எல்லா சமூகத்தவர்களோடும் கடிதப் போக்குவரத்து நடத்தவேண்டுமென 7-5-34-ல் கூடிய தலைச்சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்



மானம் நிறைவேற்றப் பெற்றிருக்கிறதென்பதையும் இங்கு ஞாபகப்படுத்துகின்றோம். மகாநாட்டுத் தேதி மிக நெருங்கி வருவதால் அசிரத்தை கொள்ளாது விரைவில் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இரண்டாவதாக:—'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்' தோன்றி பல ஆண்டுகளாக முயற்சித்தும், செங்குந்த மித்திரன் இற்றைக்குச் சுமார் எட்டு ஆண்டுகளாக உழைத்து வந்தும் முயற்சிக்கும் உழைப்புக்கும் ஏற்ற பலனோ விழிப்போ நமது சமூகத்தவர்களுக்குள் ஏற்பட்டிருக்கின்றதெனக் கூறுவதற்கில்லை. நூற்றுக் கணக்கான கிளைச்சங்கங்களைத் தலைச்சங்கம் பெற்றிருந்தும் அநேக கிளைச் சங்கங்கள் பேச்சு மூச்சற்றுக் கிடக்கின்றன; சில சங்கங்கள் மறைந்தே போயின என்று கூறலாம்; சில எழுவதும் விழுவதுமாயுள்ளன. ஏறக்குறைய இருநூறு கிளைச் சங்கங்களுள் இரண்டொன்றே தலைச்சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் முனைந்து இடைவிடாது உழைத்து வருகின்றன. சங்கர நயினார் கோவில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கமும், தென்னாப்பிரிக்காவிலுள்ள திரான்ஸ்வால் செங்குந்தர் சங்கமும், மதுரைச் செங்குந்த இளைஞர் சங்கமும், திருச்செங்கோடு செங்குந்த வாலிபர் சங்கமும் நன்கு கடனாற்றும் சங்கங்களாக முறையே வைத்து எண்ணத் தக்கவைகளாகும். இந்த நான்கு சங்கங்களால் தலைச்சங்கத்தின் நோக்கங்கள் உலகமுற்றும் பரவச் செய்யப்பட வேண்டுமாயின் அது நிறைவேறக்கூடிய காரியமன்று.

தலைச் சங்கமும் இதுவரை கிளைச் சங்கங்களின் பொறுப்பை ஏற்று அவற்றைச் சரியாக வேலை செய்யுமாறு தூண்டிவந்ததெனக் கூறுவதற்கில்லை. இந்தக் குறைகளெல்லாம் அறவே நீங்கி சமூக சேவை தளர்வுறாது நடைபெறவும், தலைச்சங்கத்தின் நோக்கங்கள் சிறிது சிறிதாகச் செயலில் வரவும் விரும்பினால் கீழ்க் குறிக்கப்பெற்ற விஷயங்களைத் தலைச்சங்கத்தார் ஆய்ந்து தக்கன செய்யுமாறு வேண்டுகின்றோம்.

(1) தலைச் சங்கத்தின் கொள்கைகளுக்கு மாறுபடாமல் அதன் நோக்கங்கள் நிறைவேறுவதற்கேற்ற வகையில் சமூக சேவை புரிந்து வரும் கிளைச் சங்கங்களுள் முதன்மையாக நிற்கும் ஒன்றிரண்டு சங்கங்களுக்கு, அவை ஆற்றிய சேவையின் நன்றியறிதலாகப் பரிசிலோ, நற்சாட்சிப் பத்திரமோ மகாநாட்டுச் சமயங்களில் வழங்கி அவற்றை கௌரவிக்க வேண்டும்.

(2) சமூக நலனைப் போற்றுவதே தமது வாழ்க்கைப் பேறெனக் கொண்டு இடையீடின்றி உழைத்துவரும் குலாபிமானக் குரிசிலர்களுக்குத் தக்க கௌரவங்கள் மகாநாட்டுச் சமயம் அளிக்கப்பட வேண்டும்.

(3) கிளைச் சங்கங்களால் மகாநாட்டுக்கும், தலைச் சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்கும் தேர்ந்தெடுத் தனுப்பப் பெறும் பிரதிநிதிகளுக்குத் தனி மதிப்பு வழங்கப்பட வேண்டும். மகாநாட்டுப் பிரதிநிதிகளும், பார்வையாளர்களும் ஒன்றாயிருப்பது தவிர்க்கப்பட்டு, மகாநாட்டு நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவும், தீர்மானங்களைப்பற்றி வாதிக்கவும், வாக்களிக்கவும் கிளைச் சங்கங்களால் மகாநாட்டுக்கெனத் தேர்ந்தெடுத் தனுப்பப்பெறும் பிரதிநிதிகளுக்கே தனி உரிமை இருக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டும்.

(4) மகாநாட்டுத் தீர்மானங்களில் முக்கியமானவைகளுக்குத் திட்டங்கள் வகுத்து, கிளைச்சங்கங்களின் தீவிர பிரசாரத்தினால் அவை விரைவில் பயன்படுமாறு முயற்சித்தல் வேண்டும்.

(5) இவைகளனைத்தும் நிறைவேறுதற்குத் தலைச் சங்க அமைப்புத் திட்டத்திலேயே பெரிய மாறுதல் செய்யப்பட வேண்டியது மிக அவசியமாகுமெனக் கருதுகிறோம். தற்போதுள்ள அமைப்பின்படி கிளைச் சங்கங்களை நிர்வகிக்கும் பொருப்பு முற்றும் தலைச் சங்கத்தையே சார்ந்ததாகும். இவ்வளவு பெரும் பொருப்பை ஏந்திக்கொண்டு உலக முற்றும் பிரசாரம் நடத்திவருவ தென்பது தலைச்சங்கம் ஒன்றினாலேயே நிறைவேற்றுதற் குரிய செய்கையாகுமா? அது முடியாமையினாலேயே இரண்டு மூன்றாண்டுகளாகப் பிரசாரம் அடியோடு நின்று விட்டதெனக் கூறுவது முற்றும் உண்மையாகும். பிரசாரம் இல்லாமல் ஒரு இயக்கம் நடைபெறுமென நினைப்பது பகற்கன வென்றே கூறலாம்.

இந்த நிலைமை மாறி, கிளைச்சங்கங்கள் தமது கடமையைத் தவறாது ஆற்றவும், செங்குந்தர் வதியும் கிராமங்கள் தோறும் பிரசாரம் மும்முரமாய் நடைபெறவும் விரும்பினால், தலைச்சங்கம் கிளைச்சங்கங்களின் பொருப்பை நேர்முகமாக வகித்து வருவதை மாற்றிவிடவேண்டும். கிராம, தாலூக்கா, ஜில்லாச் சங்கங்கள் ஏற்படுத்தப் பெற்று ஒன்றுக்கொன்று முறையே பொருப்பேற்று நடக்கவும், ஜில்லாச் சங்கங்களொன்றே தலைச்சங்கத்தின் பொருப்பிலிருக்கவும் தக்க வகையில், தலைச்சங்க அமைப்பினை மாற்றவேண்டுமென நாம் அபிப்

# பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டி அறிக்கை

மேற்படி அறிக்கை 281 பக்கங்களை யுடையது. அக் கமிட்டிகளுக்காகச் செலவானது மொத்தம் தொகை 29409 பவுன்.

## அறிக்கையின் முக்கிய அம்சங்கள்

1. சட்டம்—சமாதானம் சம்பந்தமாகக் கவர்னருக்குள்ள அதிகாரங்கள் இன்னும் அதிகமாக வலுப்படுத்தப்பட்டிருக்கின்றன. 2. ஐக்கிய மாகாணம், வங்காளம், பீஹார் இவைகளில் மட்டிலும் இரண்டாவது சட்டசபைகள் ஏற்படுத்தலாமென வெள்ளைக் காகிதத் திட்டத்தில் வகுக்கப்பட் டிருந்தாலும், இவ்வறிக்கையில் சென்னை பம்பாய் ஆகிய மாகாணங்களிலும் இரண்டாவது சபைகள் ஏற்படுத்த வேண்டுமெனச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. 3. ராணுவம் சம்பந்தமான விஷயங்களில் சட்ட சபைக்கு எத்தகைய அதிகாரமும் கிடையாது. 4. ஐக்கிய, மத்திய சட்ட சபைகள் இரண்டுக்கும் தற்பொழுதுபோல் நேரடியான தேர்தல்கள் நடத்தப்படமாட்டா. 5. இந்தியாவுடனும், இந்தியாவிலும் வர்த்தகம் செய்யும் பிரிட்டிஷ் வர்த்தகர்கட்கு இன்னும் அதிகமான பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. 6. இவ்வறிக்கையில் ஏற்படும் அரசியல் முறையில் பிரஜைகளின் மூலாதார உரிமைகள் இன்னின்னவையென வகுக்கப்படமாட்டா. 7. பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்படும். 8. பொருளாதார விஷயத்தில் வைசிராய் கையே ஓங்கி நிற்கும். 9. சமஷ்டி ஏற்படும் சமயம் நிர்ணயிக்கப்படவில்லை.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

பிராயப் படுகிறோம். அவ்வாறு மாற்றப்படின் தாலூக்காச் சங்கங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் தீவிரமாகப் பிரசாரம் நடத்துதற்கு முனைந்து நிற்கக்கூடும்.

இம்மாறுதல் மிக முக்கியமான தாகையால் பொதுஜன அபிப்பிராயம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். ஐந்தாவது மகாநாடு நடக்க இன்னும் ஒரு மாதத்திற்கு மேல் இருப்பதால் அதற்குள் செங்குந்தப் பெருமக்களின் அபிப்பிராயங்களை யுணர்ந்து மகாநாட்டின் ஆலோசனைக்குக் கொண்டுவர இயலுமாகையால், இது விஷயத்தில் தலைச்சங்கத்தார் உடனே தக்க கவனம் செலுத்துவார்களென எண்ணுகிறோம்.

இவைகளை யெல்லாம் தலைச்சங்கத்தினர் நன்கு ஆய்ந்து தக்கன செய்வார்களாயின், நமது நோக்கங்கள் விரைவில் நிறைவேறுமென்று நாம் பூரணமாய் நம்பலாம்.

## மாகாண சுய ஆட்சி

மாகாணங்களுக்குச் சுய ஆட்சி அளிக்க வேண்டுமாகையால் இரட்டை ஆட்சி ரத்து செய்யப்பட்டுவிடும்.

இந்தியாவைவிட்டுப் பர்மா பிரிக்கப்படும். சிந்து, ஒரிஸா இரண்டும் தனி மாகாணங்கள். ஒரிஸா, சென்னை மாகாணத்தில் கஞ்சம் ஜில்லாவில் ஒரு பாகமும், மத்திய மாகாணத்தில் ஒரு பாகமும், பீகார் மாகாணத்தில் ஒரு பாகமும் அடங்கியதாயிருக்கும்.

## ஆலோசனை மந்திரிகள்

மாகாண நிர்வாகத்தைச் சட்டசபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளின் யோசனையின்பேரில் கவர்னர்கள் நடத்துவார்கள். கவர்னர் விசேஷப் பொறுப்பில் விடப்பட்ட விஷயங்களைத் தவிர, மற்ற விஷயங்களில் மந்திரிகள் யோசனை கூறலாம். வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் தனி அதிகாரங்கள் கவர்னர்களுக்குண்டு.

## மாகாண இலாகாக்கள்

*மாகாண சர்க்காரின் இலாக்காக்கள் :*

1. ஸ்தல ஸ்தாபனங்கள். 2. ஆஸ்புத்திரிகள். 3. சுகாதாரம். 4. யாத்திரை நிர்வாகம் (இந்தியா விற்குள்.) 5. கல்வி இலாகா. 6. பொது மராமத்து. 7. நிர்ப்பந்த நில விக்ரயம். 8. ரஸ்தாக்கள், பாலங்கள். 9. டிராம் போடுவது. 10. ஜலவசதி. 11. நிலவரி. 12. மைனர் ஜமீன்கள். 13. மதுபானங்களுக்கு வரி. 14. கூட்டுறவு இலாகா. 15. காட்டிலாகா. 16. மாகாண நிதி இலாகா. 17. ரிஜிஸ்டிரேஷன் இலாகா. 18. ஜனன மரண இலாகா. 19 சுரங்கம். 20. கோவில், குளங்கள். 21. தொழில் அபிவிருத்தி. 22. தொழிற்சாலைகள். 23. மின்சாரம். 24. சில்லறைத் துறைமுகங்கள். 25. போலீஸ். 26. சூதாட்டம். 27. சிறை. 28. தேர்தல்கள். 29. பப்ளிக் சர்வீஸ் கமிஷன். 30. லேவாதேவி.

இதுமாதிரி இன்னும் சுமார் 50 சில்லரை விஷயங்கள்.

## சட்டமும் ஒழுங்கும்

சட்டம், அமைதி இவற்றை நடத்தும் இலாகா மந்திரிகள் கையிலிருக்கும். ஆனால் போலீஸ் இலாகாவைப் பாதுகாக்கும் பொருப்பு கவர்னருடையதே. பயங்கர இயக்கத்தை ஒடுக்கும் முயற்சிக்கு வேண்டுவனவற்றை கவர்னர் தனிப் பொருப்பில் செய்யலாம்.

## மாகாணச் சட்டசபைத் தேர்தல் முறை

இப்பொழுது மாகாணச் சட்டசபைகளின் ஓட்டர்கள் 70 லட்சம் இருக்கிறார்கள்; இனி 290 லட்சம் ஓட்டர்கள் இருப்பார்கள். சட்டசபைக்கு ஓட்டர்கள் தேர்தல் செய்வார்கள்.



## மாகாணச் சட்டசபைகள்

வங்காளம், ஐக்கிய மாகாணம், பீஹார், சென்னை, பம்பாய் இவைகளில் இரண்டு சட்டசபைகள் அமைக்கப்படும். இரண்டாவது கலைக்கப்படமாட்டா. ஆனால் மூன்றிலொரு பாகம் அங்கத்தினர்கள் ஸ்தானங்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்கொருதரம் தேர்தல் நடைபெறும்.

## நீதி பரிபாலன இலாகா

சமஷ்டி நீதிஸ்தலம் ஏற்படும். மாகாண ஹைகோர்ட்டுகளிலிருந்து அப்பீல் விசாரிக்க அகில இந்திய நீதிஸ்தலம் (ஸுப்ரீம் கோர்ட்) கிடையாது. ஆனால் சமஷ்டிக் கோர்ட்டின் அதிகாரத்தை சமஷ்டி சட்டசபை மாற்ற அதிகாரம் உண்டு. கிரிமினல் வழக்குகளில் தற்காலமுள்ள அப்பீல் உரிமைதான் இனிமேலும் உண்டு.

## பிரிட்டிஷ் வர்த்தகத்திற்குப் பாதுகாப்பு

பிரிட்டிஷ் சாமான்கள் இந்தியாவில் இறக்குமதியாவதைத் தடுக்கும் சட்டங்கள் நிறைவேறாமல் கவர்னர் பாதுகாக்கவேண்டியது.

## சமஸ்தானங்களும், சமஷ்டியும்

சமஷ்டி அரசியல் அமுலுக்கு வருவது, போதுமான சமஸ்தானங்கள் அதில் சேருவதைப் பொருத்திருக்கிறது. வெள்ளை அறிக்கையில் கூறி யிருக்கிறபடி சமஸ்தானங்களின் பிரதிநிதிகளை சமஸ்தான அரசர்களே நியமிக்கவேண்டும். சமஸ்தானங்களுக்குச் சட்டசபையில் எவ்வளவு பிரதிநிதித்துவம் என்பதைப்பற்றி வெள்ளை அறிக்கையிலுள்ள விதாசாரத்தைக் கூட்டுக் கமிட்டி ஒப்புக்கொள்ளுகிறது. சமஸ்தானங்களைப் பற்றிய விஷயம் சமஷ்டி சட்டசபைக்குட்பட்டதல்ல. அது ராஜப் பிரதிநிதியின் தனிப் பொருப்பு.

## மத்திய அரசாங்க நிர்வாகம்

ராஜப் பிரிதிநிதிக்கு மூன்று நிர்வாக அங்கத்தினர்கள் உண்டு. ராணுவம், வெளிநாட்டு விஷயங்கள், கிருஸ்தவமத விஷயம், பிரிட்டிஷ் பலுசிஸ்டான் நிர்வாகம் இவைகளை நிர்வாக அங்கத்தினர்கள் நடத்துவார்கள். மற்ற விஷயங்களை இந்திய சமஷ்டி சட்டசபை அங்கத்தினர்களிலிருந்து பொறுக்கி யெடுக்கப்பட்ட மந்திரிகள் நிர்வகிப்பார்கள். மாகாண கவர்னர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் விசேஷ அதிகாரங்களுடன் நிதி நிர்வாகம் கெட்டுவிடாமல் பாதுகாக்கும் பொருப்பும் ராஜப்பிரதிநிதிக்கு உண்டு.

## சர்க்கார் அமைப்பு மாற்றம்

அரசாங்க அமைப்பில் மாறுதல் ஏற்படவேண்டுமெனச் சட்டசபைகள் அபிப்பிராயப்பட்டால், அச்சட்டசபையின் தீர்மானங்கள்

இங்கிலீஷ் பார்லிமெண்டின் இரு சபைகளாலும் ஒப்புக்கொள்ளப் பட்டால் அமுலுக்கு வரும்.

### சமஷ்டி சட்ட சபை

சமஷ்டி சட்டசபையில் முஸ்லீம்களுக்குப் பிரிட்டிஷ் இந்தியர்களுக்குள்ள பிரதிநிதித்வத்தில் மூன்றில் ஒரு பங்கு உண்டு. பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகளை மாகாணச் சட்டசபை அங்கத்தினர் வகுப்பு வாரியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த வடிகட்டின (Indirect) தேர்தல் முறையைமாற்ற சமஷ்டி சட்டசபை பிரியப்பட்டால், அத்தீர்மானம் பார்லிமெண்டின் அங்கீகாரத்துக்கு அனுப்பப் படவேண்டும். ராஜாங்க சபைக்கு இரண்டு சட்டசபைகள் இருக்கும். மாகாணங்களில் மாகாணச் சபைக்கு ஓட்டுரிமை யுள்ளவர்கள் ஒரு தேர்தல் சபையை ஏற்படுத்தவேண்டும். அந்தச்சபையினர் தனியாகக் கூடி ராஜாங்க சபைப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இதற்கு ஓட்டு முறை மாற்றப்படாத ஒற்றை ஓட்டுமுறை. இந்த ராஜாங்க சபைக்கு ஆயுள் 9 வருஷம். ஆனால் 3 வருஷத்திற் கொருதரம் மூன்றிலொரு பங்கு ஸ்தானங்களுக்குத் தேர்தல் உண்டு.

### உத்தியோக நியமனங்கள்

சிவில் சர்விஸ், போலீஸ் இலாகா இவ்விரண்டின் உயர்தர உத்தியோகஸ்தர்களைச் சீமையில் பொறுக்கக்கூடாது. இந்த இரண் டிலாகாவுக்கும் கூட இந்திய உத்தியோகஸ்தர்கள் இந்தியாவிலேயே பொறுக்கப்படலாம்.

### ரிசர்வ் பாங்கி

ரிசர்வ் பாங்கி நிர்மாணிக்கப்படும். இதன் சட்ட திட்டங்களை ராஜப் பிரதிநிதியின் அனுமதியில்லாமல் சட்டசபை மாற்றமுடியாது.

### ரயில்வே போர்டு

ரெயில்வே போர்டு ஒன்று தனியாக ஏற்படுத்தப்படும். இந்தப் போர்டின் கொள்கைகளைச் சட்டசபை நிர்ணயிக்கலாம். ஆனால், இதன் நிர்வாகத்தில் சட்ட சபைக்கு அதிகாரம் கிடையாது.

### செலவு பரிசீலனை

இந்தப் புதிய அரசியல் திட்டத்தினால் இந்தியாவுக்கு ஏற்படக் கூடிய செலவைப் பரிசீலனை செய்வதற்கு சீக்கிரம் ஏற்பாடு செய்யப் படும். ஆனால் இதற்கு ஒரு தனிக் கமிட்டி தேவை இல்லை.

### தொழிற்கட்சியாரின் அபிப்பிராயம்

கூட்டுக்கமிட்டியின் மேற்குறித்த முடிவுகளுக்குப் பதிலாகக் கூட்டுக்கமிட்டியின் தொழிற் கட்சி அங்கத்தினர் சில யோசனைகள் கூறியிருக்கின்றனர். அவைகளின் சாராம்சம்:—



1. பார்லிமெண்டில் அனுமதியின்றிக் குடியேற்ற நாட்டந்தஸ்தை இந்தியா அடைவதற்கு இந்தச் சட்டத்திலேயே ஒரு பிரிவு இருக்க வேண்டும்.

2. பர்மா மக்களைச் சுரண்டுவதைத் தடுப்பதற்குப் பாதுகாப்பு வேண்டும்.

3. இரண்டு சட்டசபைகள் கூடாது.

4. சமஷ்டி அரசியல் எப்பொழுது அமுலுக்குவரும் என்று தேதி குறிப்பிட வேண்டும்.

5. சமஸ்தானங்களில் சட்டசபைகள் இருந்தால், சமஸ்தானப் பிரதிநிதிகளை அச்சட்டசபைகளே தேர்ந்தெடுக்க வேண்டும்.

6. பாதுகாப்புகள் இவ்வளவு விரிவாக இருக்கக்கூடாது. குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில்தான் ராஜப்பிரதிநிதி விசேஷ அதிகாரத்தைச் செலுத்தலாம் என்று சட்டமிருக்கவேண்டும்.

7. இந்திய சட்டசபைக்கு வெளி நாட்டு விஷயங்களை நிர்வகிக்க உரிமை இருக்கவேண்டும்.

8. கிருஸ்தவ மதத்துக்காகத் தனியாக இருக்கும் இலாகாவை எடுத்துவிடவேண்டும்.

9. 30 வருஷத்துக்குள் ராணுவ நிர்வாகம் இந்தியர்களுக்கும் அளிக்கப்படவேண்டும்.

10. மாகாணங்களில் சட்டம், ஒழுங்கு இவ்விரண்டின் இலாகா நிர்வாகத்தில் மந்திரிகளுக்குப் பூர்ண அதிகாரம் இருக்கவேண்டும்.

11. நிலச்சுவான்தார்கள், சர்வகலாசாலைகள், வர்த்தகர்கள், தோட்டக்காரர்கள் இவர்களுக்கென்று சட்டசபையில் பிரதிநிதித்வம் கூடாது. 100-க்கு 10 சட்டசபை ஸ்தானங்கள் தொழிலாளருக்கு ஒதுக்கப்படவேண்டும்.

12. பிரிடிஷ் வியாபாரத்தை ஒடுக்கும் சட்டங்கள் ராஜப்பிரதிநிதியின் சம்மதம் பெற்றுக்கொண்டுதான் கொண்டுவரவேண்டும் என்று ஏற்பாடுசெய்யலாம். ஆனால் இம்மாதிரி விஷயங்களில் சமரஸ முறைகளே அநுஷ்டிக்கப்படவேண்டும்.

### பர்மா விஷயம்

இந்தக் கூட்டுக்கமிட்டி அறிக்கையில் பர்மாவைப்பற்றிச் சொல்லியிருக்கும் பாகங்களாவன:—

1. பர்மா இந்தியாவைவிட்டுப் பிரிக்கப்படும்.

2. பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் ஒருவருஷம் அமுலிலிருக்கும்படியான ஒரு வியாபார ஒப்பந்தம் செய்யப்படும். ஆனால் இந்த ஒப்

பந்தத்தில் இரு தேசங்களின் சார்பாக்வும் யார் பிரதிநிதிகளாக யிருப்பார்கள் என்பது குறிப்பிடப்படவில்லை.

3. பர்மா கவர்னருக்கு ராஜப் பிரதிநிதிக்குள்ள அதிகாரங்களெல்லாம் உண்டு. நாணயம் அடித்தலும் கவர்னருடைய பொருப்பு.

4. ரிசர்வ் பாங்கி கிடையாது. இந்தியாவில் ரிசர்வ் பாங்கிக்குள்ள அதிகாரம் பர்மா கவர்னருக்கும் உண்டு.

5. மூன்று யோசனை சொல்பவர்களையும், ஒரு நிதி சாஸ்திர நிபுணரையும் கவர்னர் நியமித்துக்கொள்ளலாம்.

6. இரண்டு சட்டசபைகள். செனட் என்னும் சபைக்கு 36 மெம்பர்கள். இவர்களில் 18-பேர் பெரிய சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இன்னும் 18-பேர் கவர்னரால் உத்யோகப் பற்றற்றவர்களி லிருந்து நியமிக்கப்படவேண்டும். இந்த சபைக்கு ஆயுள் 7 வருஷம். பெரிய சபைக்கு 130 அங்கத்தினர்கள். 64 பொதுத் தொகுதிகள்; 25 தனித் தொகுதிகள்; 11 வர்த்தகம், தொழில் முதலான வகுப்புகளுக்கு. இந்த சபைக்கு ஆயுள் 5 வருஷம்.

7. தற்போது ஜனத் தொகுதியில் 100-க்கு 16-பேருக்கு ஓட்டு உண்டு. இனி 100-க்கு 26 பேருக்கு ஓட்டு இருக்கும்.

8. பர்மாவிற்கு ஒரு ரயில்வே போர்டு ஏற்படும். ஆனால் நிதி சாஸ்திர நிபுணர் இந்தப் போர்டில் அங்கத்தவரா யிருக்கக்கூடாது.

9. இந்தியா மந்திரியே, பர்மாவுக்கும் மந்திரியாயிருப்பார். ஆனால் அது தனி இலாகாவாக இருக்கும்.

10. பிரிட்டிஷ் வியாபாரத்திற்கு இந்தியாவிலுள்ள சலுகை பர்மாவிலும் உண்டு. பர்மாவில் உள்ள இந்தியர்களுக்கு இந்தியாவில் ஆங்கிலேயருக்குள்ள பாதுகாப்புகள் உண்டு.

'நகரதூதன்'


## மாகாண புத்தகசாலை

எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்

வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்

விலாசம்:—

151, பவழக்காரத் தெரு சென்னை.




208452
சென்னை-600 008

# ஆரம்ப ஆலோசனைக் கூட்டம்

சென்ற மகாநாட்டில் தீர்மானித்துள்ளபடி நமது ஐந்தாவது மகாநாட்டை இவ்வாண்டில் வடாற்காடு ஜில்லாவில் கூட்டுவதைப் பற்றி ஆலோசிப்பதற்காக நிகழும் பவஹு கார்த்திகைமீ 14உ (29-11-34) வியாழக்கிழமை மாலை 3-மணிக்கு திருவத்திபுரம் ஸ்ரீ பக்ஷீஸ்வரர் தேவாலயத்தில் செங்குந்த மகா ஜனங்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. அச்சமயம் திருவத்திபுரத்திலிருந்தும் அதைச் சார்ந்த பேட்டைகளி லிருந்தும் முக்கியஸ்தர்கள் பலரும் விஜயம் செய்திருந்தனர். சென்னை தலைச்சங்கப் பிரதிநிதிகளாக ஸ்ரீ. மா. அ. கனகசபை முதலியார், 'செங்குந்த மித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ. பி. செ. மாணிக்கவாசகமுதலியார், ஸ்ரீ. தி. அ. சண்முக முதலியார் ஆகியோர் வந்திருந்தனர். கூட்ட ஆரம்பத்தில் ஸ்ரீ. மா. அ. கனகசபை முதலியார் அவர்களும், மித்திரன் ஆசிரியர் ஸ்ரீ. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், வடாற்காடு ஜில்லா போர்டு அங்கத்தினர் ஸ்ரீ. மா. லோகநாத முதலியார் அவர்களும் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துக் கூறினர். பின்பு கீழ்க்கண்ட விஷயங்கள் தீர்மானிக்கப்பெற்றன.

(1) தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாட்டை வடாற்காடு ஜில்லாவின் சார்பாக இவ்வாண்டில் இவ்வூரில் நடத்துவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(2) மேற்படி மகாநாட்டின் வரவேற்புச் சபையினை அமைக்கவும், மகாநாடு நடக்கவேண்டிய காலம் முதலிய பல விஷயங்களையும் ஆய்ந்து முடிவு செய்யவும் வடாற்காடு ஜில்லாவிலுள்ள செங்குந்தர்களடங்கிய மகாஜனக் கூட்டம் ஒன்றை அடுத்த திங்கட்கிழமை 3-12-34-ந் தேதி பகல் 2-மணிக்குக் கூட்டவேண்டுமென தீர்மானிக்கிறது.

(3) திங்கட்கிழமை கூட்டத்திற்குக் கீழ்க்கண்டவர்களின் பெயர்களுடன் அழைப்பிதழ் அச்சிட்டு அனுப்பவேண்டியது.

| | |
|---|---|
| மு. பரசுராம முதலியார் | ந. கந்தசாமி முதலியார் |
| பி. சோலை முதலியார் | தா. துரைசாமி முதலியார் |
| க. பொன்னுசாமி முதலியார் | மா. லோகநாத முதலியார் |
| பெ. முத்துசாமி முதலியார் | கு. அ. அப்பாசாமி முதலியார் |
| நெ. அண்ணாமலை முதலியார் | க. சுப்பிரமணிய முதலியார் |
| அ. ஆனையா முதலியார் | வெ. வேலு முதலியார் |

வந்தனோபசாரத்தின் பின் இரவு 8½-மணிக்குக் கூட்டம் முடிவு பெற்றது.

# வரவேற்புக் கழக அமைப்பு

தினசரிப் பத்திரிகைகள் மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் முன்னமே அறிவித்திருந்தபடி, தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாட்டின் வரவேற்புக் கழகத்தினை அமைக்கவும், மகாநாடு நடத்துவதற்குரிய காலம் முதலிய பல விஷயங்களை முடிவு செய்யவும் 3-12-34-ந் தேதி திங்கட்கிழமை மாலை 2-மணிக்கு வடார்க்காடு ஜில்லா செங்குந்தர்களின் மகாஜனக் கூட்டம் ஒன்று, திருவத்திபுரம் ஸ்ரீ பக்ஷீஸ்வரர் ஆலயத்தில் திரு. க. பொன்னுசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. கூட்டத்திற்குத் திருவோத்தூர், பரிதிபுரம், ஈஸ்வரபுரம், கிருதனம் பேட்டை, கோனேரிராயன் பேட்டை, அசனம்மா பேட்டை, புதுப்பேட்டை, கலவை, வாழைப்பந்தல், தக்கோலம், சத்துவாச்சாரி ஆகிய ஊர்களிலிருந்து அநேக பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர். சென்னை தலைச்சங்கப் பிரதிநிதிகளும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.

(1) தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாட்டை வடார்க்காடு ஜில்லாவின் சார்பாக, **திருவத்திபுரம் போர்டு ஹைஸ்கூல் காம்பவுண்டுக்குள்** 1935-ம் ஆண்டு, ஜனவரி மாதம், 26, 27-ந் தேதி (பவஹு தைமீ 13, 14உ) சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்த வேண்டும்.

(3) இக்கூட்டத்திற்கு விஜயம் செய்துள்ளவர்களனைவரும் வரவேற்புக் கழக அங்கத்தினர்களாகக் கருதப்படவேண்டியதோடு இன்னும் பலரையும் வரவேற்பு அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள இவர்களுக்கு அதிகாரம் உண்டு.

(4) வரவேற்புச் சபை நிருவாகிகளாகக் கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப் பெற்றனர்.

## வரவேற்புக் கழகத்தினர்

சமூக மகாநாடு

வரவேற்புத் தலைவர் :—மா. லோகநாத முதலியார்,
ஜில்லா போர்டு அங்கத்தினர், திருவத்திபுரம்.
,, உபதலைவர்கள் :—T. K. சுக்கிரமணிய முதலியார்,
பஞ்சாயத்து போர்டு தலைவர், சத்துவாச்சாரி.
ப. சோலை முதலியார்,
ஜவுளி வர்த்தகர், திருவத்திபுரம்.
,, காரியதரிசி :—மொ. சு. குப்புசாமி முதலியார்,
ஜில்லா போர்டு அங்கத்தினர், களம்பூர்.



தகர் மகாநாடு

வரவேற்புத் தலைவர் :—M. V. பீமராஜா முதலியார்,
முனிசிபல் சேர்மன், குடியேற்றம்.
,, உபதலைவர்கள் :—சா. ரா. மாணிக்க முதலியார்,
சவுகார், பனப்பாக்கம்.
த. துரைசாமி முதலியார்,
ஜவுளி வர்த்தகர், திருவத்திபுரம்.
,, காரியதரிசி :—அப்பாவு முதலியார்,
ஜவுளி வர்த்தகர், அம்மையப்பட்டு.

வாலிபர் மகாநாடு

வரவேற்புத் தலைவர் :—A. R. செல்லப்ப முதலியார்,
மிராசுதார், தக்கோலம்.
,, உபதலைவர்கள் :—பட்டணம், M. நாகரத்தின முதலியார்,
பஞ்சாயத்து போர்டு தலைவர், சோளிங்கபுரம்.
மா. வே. துரைசாமி முதலியார்
மில் ஏஜண்டு, குடியேற்றம்.
காரியதரிசி :—த. சம்பந்தமூர்த்தி முதலியார்,
சவுகார், பனப்பாக்கம்.

**பொதுக் காரியதரிசி** :—K. S. குப்புசாமி முதலியார்,
மிராசுதார் & டிரஸ்டி, அசனம்மா பேட்டை.
**பொருட் காப்பாளர்கள்** :—கு. அப்பாசாமி முதலியார்,
பட்டு ஜவுளி வர்த்தகர், திருவத்திபுரம்.
பெ. முத்துசாமி முதலியார்,
மரவியாபாரம், ,,

(5) கீழ்க்கண்ட உப கமிட்டிகள் அமைக்கப் பெற்றன.

## உப கமிட்டிகள்

பந்தல் கமிட்டி

தலைவர் :—ந. கந்தசாமி முதலியார், திருவோத்தூர்.
அங்கத்தினர்கள் :—சி. ப. எல்லப்ப முதலியார்,
கிருதனம்பேட்டை.
செ. சுப்பராய முதலியார், பரிதிபுரம்.
சி. ஜெ. சண்முக முதலியார்; ,,
க. முத்துசாமி முதலியார், அசனம்மாபேட்டை.

சாப்பாட்டுக் கமிட்டி

தலைவர் :—நெ. அண்ணாமலை முதலியார், பரிதிபுரம்.
அங்கத்தினர்கள் :—P. S. ஏகாம்பர முதலியார் ,,
மா. ஆறுமுக முதலியார், கிருதனம்பேட்டை.
மு. ஆறுமுக முதலியார், திருவோத்தூர்.
கோ. குள்ளப்ப முதலியார், அசனம்மாபேட்டை.

ஊர்வலக் கமிட்டி

தலைவர்:—மு. பரசுராம முதலியார், திருவோத்தூர்.
அங்கத்தினர்கள்:—T. A. வேலாயுத முதலியார் ,,
குட்டைய முதலியார் ,,
மோ. சு. லோகநாத முதலியார், பரிதிபுரம்.
ம. ரா சோமசுந்தர முதலியார், இருதனம்பேட்டை.
M. வேதபுரி முதலியார் ,,

விளம்பர சபை

தலைவர்:—க. சின்னசாமி முதலியார், இருதனம்பேட்டை.
அங்கத்தினர்கள்:—P. இராமலிங்க முதலியார், ஈஸ்வரபுரம்.
சி. சுப்பராய முதலியார், பரிதிபுரம்.
D. நரசிம்ம முதலியார், ,,
A. தம்பிரான் முதலியார், ,,
S. லோகநாத முதலியார், ,,
K. A. ஆதிமூல முதலியார், இருதனம்பேட்டை.

தொண்டர் படை

தலைவர்:—பி. பொன்னம்பல முதலியார், அசனம்மாபேட்டை.
உபதலைவர்:—V. ஆரிமுத்து, முதலியார், ,,

(6) வரவேற்பு அங்கத்தினர்கள் ஒன்பது பேர்களுக்குக் குறையாமல் சேர்ந்தால் வரவேற்புக் கூட்டத்தினை நடத்தலாம்.

'செங்குந்த மித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இரவு 7½-மணிக்கு இனிது நிறைவேறியது.

# தொண்டர்கள் பதிவு

ஐந்தாவது மகாநாட்டுக்குத் தொண்டர்கள் பதிவு செய்யப்பெற்று வருகின்றனர். தொண்டர்கள் எந்த ஊரிலிருந்தும் சேரலாம். தொண்டர்களாக இருந்து குலப்பணியாற்ற விரும்புவோர் 8-1-35-ந் தேதிக்குள் விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். விண்ணப்பங்களெல்லாம் கீழே யுள்ளபடி பூர்த்தி செய்யப்பட்டு 'தொண்டர் படைத் தலைவர், தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு, திருவத்திபுரம்' என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். விண்ணப்பங்களைத் தொண்டர் படைத் தலைவர்கள் பரிசீலனை செய்து 10-1-35-ந் தேதி தேர்ந்தெடுக்கப்பெற்ற தொண்டர்களுக்கு அறிவிப்பார்கள். உள்ளூர் தொண்டர்கள் 12-1-35-ந் தேதியும், வெளியூர் தொண்டர்கள் 20-1-35-ந் தேதியும் திருவத்திபுரத்திலுள்ள மகாநாட்டுக் காரியாலயத்தில் வந்து சேர்ந்துவிடவேண்டும். வந்தது முதல் தினந்தோறும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். தொண்டர்களாக வருவோர் 15-வயதுக்கு மேலும் 30-வயதுக்குள்ளு மிருப்பவர்களாகவும், மகாநாட்டுப் பிரதிநிதிகள் எதிர்பார்க்கும் வேலைகளையெல்லாம் யாதொரு தடையுமின்றி செய்வதற்குத் தயாராக இருப்பவர்களாகவும் இருக்கவேண்டும். ஒரு மகாநாடு மிக ஒழுங்காகவும், சிறப்பாகவும் நடைபெறுதற்குத் தொண்டர்களே அதிக உபயோகமுடையவர்களாதலின் எவரும் பெயரளவில் தொண்டராக இருக்க விரும்பாது உண்மைத் தொண்டராக—பிரதிநிதிகளுக்கு முகமலர்ச்சியோடு ஊழியம் புரிபவர்களாக இருக்கவேண்டும். அறிவும், பொது நோக்கமுமுடைய செங்குந்த இளைஞர்கள் தொண்டர் படையில் சேர்ந்து குலத்தொண்டும், தேசத் தொண்டும் புரிய தம்மைப் பக்குவர்களாக்கிக் கொள்வார்களென நம்புகிறோம்.

பி. பொன்னம்பல முதலியார், தலைவர்.
வி. ஆரிமுத்து முதலியார், துணைத்தலைவர்.



# விண்ணப்பம் எழுதவேண்டிய முறை

## தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு

தொண்டர் படைத் தலைவர் அவர்களுக்கு

ஐயா, 1935-ம் வருஷம், ஜனவரி மாதம், 26, 27-ந் தேதிகளில் திருவத்திபுரத்தில் நடைபெறப்போகும் செங்குந்தர் ஐந்தாவது மகாநாட்டுத் தொண்டர் படையில் நான் தொண்டனாகப் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன். தங்கள் அறிக்கையின்படி மகாநாட்டுப் பிரதிநிதிகட்குத் தொண்டு புரியவும், தங்கள் கட்டளைகட்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் நான் சித்தமாயிருக்கிறேன். தாங்கள் குறிப்பிட்டுள்ள தேதியில் மகாநாட்டுக் காரியாலயத்தில் தவறாது ஆஜராகின்றேன். ஆகவே, என்னைத் தொண்டனாகப் பதிவு செய்துகொண்டு உத்தரவு அனுப்புமாறு வேண்டுகிறேன்.

தொண்டர் பெயர்..............................................................

தந்தையின் பெயர்..............................................................

புரியும் தொழில்..............................................................

வயது..............................................................

உயரம்..............................................................

இப்படிக்கு,
பொதுச் சேவை புரிய ஆர்வமுள்ள,
(கையொப்பம்.)..............................................
விலாசம்..............................................

# தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாட்டு வசூல்

## திருவத்திபுரம்

### கிருதனம்பேட்டை

| | ரூ. |
|---|---|
| மா. ஆ. லோகநாத முதலியார் | 100 |
| க. பொன்னுசாமி முதலியார்<br>க. சின்னசாமி முதலியார் | } 35 |

### பரிதிபுரம்

| | |
|---|---|
| கு. அ. அப்பாசாமி முதலியார் | 35 |
| நெ. அண்ணாமலை முதலியரர் | 35 |

### திருவோத்தூர்

| | |
|---|---|
| ப. சோலை முதலியார் | 10 |
| சோலை. முருகேச முதலியார் | 10 |
| தேவராயன், பழனிவேல் முதலியார் | 10 |
| பிள்ளையார் கோவில் முனுசாமி முதலியார் | 10 |
| குட். ஆறுமுக முதலியார் | 10 |
| ம. மு. மாணிக்க முதலியார் | 5 |
| ந. கந்தசாமி முதலியார் | 5 |
| சுந். அண்ணாமலை முதலியார் | 5 |
| தே. ஆ. ஏகாம்பர முதலியார் | 5 |
| சோலை. சின்னையா முதலியார் | 5 |
| வே. சின்னு முதலியார் | 5 |
| T. A. வேலாயுத முதலியார் | 5 |
| பு. குப்புசாமி முதலியார் | 5 |
| | 285 |

### மணப்பாக்கம்

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் | 25 |
| இ. வயிரவ முதலியார் | 2 |
| இரா. குமாரசாமி முதலியார் | 1 |
| சந்தியா முதலியார் | 1 |
| சின்னபைய முதலியார் | 1 |
| இ. வெங்கடாசல முதலியார் | 1 |
| கலவை. விஜயராகவ முதலியார் | 1 |
| தொ. சின்னசாமி முதலியார் | 1 |
| ச. எல்லப்ப முதலியார் | 1 |
| பு. வீராசமி முதலியார் | 1 |
| | 35 |

### ஆராந்திரி வேலூர்

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் | 10 |

### தெங்கழனி புதுப்பேட்டை

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் | 12 |
| மு. அப்பாதுரை முதலியார் | 1 |
| த. மு. இரத்தின முதலியார் | 1 |
| எல்லப்ப முதலியார் | 1 |
| | 15 |

### அசனம்மாபேட்டை

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் | 75 |
| மே. தி. பொற்பாத முதலியார் | 10 |
| தி. செ. இரத்தினவேல் முதலியார் | 6¾ |
| பி. க. பொன்னம்பல முதலியார் | 6 |
| சு. எல்லப்ப முதலியார் | 5 |
| K. S. குப்புசாமி முதலியார் | 5 |
| மே. படிகலிங்க முதலியார்<br>ந. அண்ணாமலை முதலியார் | } 5 |
| பு. மொ. நடேச முதலியார் | 3 |
| T. A. கந்தப்ப முதலியார் | 3 |
| இரு. கோபால் முதலியார் | 3 |
| சூரி. பரசுராம முதலியார் | 3 |
| பி. ந. மாணிக்க முதலியார் | 3 |
| கச்சபாலைய முதலியார் | 3 |
| பு. முருகப்ப முதலியார் | 3 |
| குப். ராமசாமி முதலியார் | 3 |
| கொ. குள்ளப்ப முதலியார் | 2 |
| ம. சுந்தர முதலியார் | 2 |
| குப். செங்கல்வராய முதலியார் | 2 |
| சார். பச்சையப்ப முதலியார் | 2 |
| இ. பச்சையப்ப முதலியார் | 2 |
| நல். சரவணபெருமாள் முதலியார் | 2 |
| வீ. முனியப்ப முதலியார் | 2 |
| நல். சிங்கார முதலியார் | 1 |
| பு. இரத்தினவேல் முதலியார் | 1 |
| இ. ஆறுமுக முதலியார் | 1 |

# கனகவல்லியின் காதல்

(T. S. சண்முகசுந்திரம், பரங்கி நெல்லூர்)

காலை சுமார் எட்டு அல்லது எட்டரை மணி இருக்கலாம். மாருதி மந்தகாசத்துடன் சிலுசிலுவென ஜன்னல் வழியாகப் புகுந்து மனதிற்கு இன்பமளிக்கின்றது. ஹாலின் நடுவில், காண்போர் ஐயுற்று பொன்னோ, பூங்கொடியோ வென வியப்புறும்படி துல்லியமான 'கதர் புடவை' யணிந்து, படாடோப மின்றி கலைமகளேபோல் 'கனகவல்லி' ஸோபாவில் வீற்றிருந்தாள். வயது பதினெட்டிற்கு அதிகமிராது. அன்னவளின் கரத்தில் "கற்பின் மகிமை" என்னும் நூல் விரித்தபடியே இருந்தது. பெண்களுக் கென்றே ஏற்பட்ட விலையில்லா மாணிக்கமாகிய கற்பின் மகிமையை அப்புஸ்தகம் நன்கு விளக்கிக் காட்டுவதைப் படித்துப்படித்து ஆநந்தத்தில் அழுந்தி யிருந்தாள். அச்சமயம் திடீரெனத் தன் கண்களை யாரோ பொத்தினதாக அறிந்ததும் திடுக்குற்றாள். புஸ்தகத்தின் நினைவு எங்கேயோ பறந்துவிட்டது. இவ்வித சேஷ்டையினை இதற்குமுன் தான் அனுபவித்ததில்லை யாதலால் பதறிவிட்டாள். உடல் நாணத்தால் தளர்வுற்றது. கண்களைப் பொத்தியிருந்த கரங்கள் மிருதுவாக இருந்தன வாதலால் பொத்தினவர் ஆணோ, பெண்ணோ என்று அவள் நிச்சயிக்கக் கூடவில்லை. இரண்டு நிமிடம் கழித்துப் பேசலானாள்.

"ஆமாம்......இப்படி திடீரென்று கண்களைப் பொத்தினால் நான் யாரென்று நினைப்பது? யாராக யிருந்தாலும் நீங்கள் வருவதை அறியாமல் இருந்த குற்றத்தை மன்னித்துக் கரங்களை எடுத்து விடுங்கள்" என்று சற்று கடுமையாகவும் கிள்ளையைப்போலவும் மொழிந்தாள்.

கண்களைப் பொத்தின விஜயசுந்தரம் கடகடவென்று நகைத்து "ஓஹோ! பிழையும் செய்துவிட்டு மன்னிப்பும் வேண்டுமோ? நீசெய்த பிழைக்கு மன்னிப்பே கிடையாது. கடுமையான தண்டனைதான்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| நல். முருகேச முதலியார் | 1 |
| பு. துரைசாமி முதலியார் | 1 |
| மோ. நடேச முதலியார் | 1 |
| மோ. நாராயண முதலியார் | 1 |
| மோ. குள்ளப்ப முதலியார் | 1 |
| வெ. சபாபதி முதலியார் | 1 |
| | 159¾ |

### சித்தாத்தூர்

| | |
|---|---|
| கிராமப் பொதுவில் | 20 |
| வே. சடையாண்டி முதலியார் | 15 |
| கு. க. முனுசாமி முதலியார் | 5 |
| சி. க. கன்னியப்ப முதலியார் | 3 |
| மாயாண்டி முதலியார் | 2 |
| லக்ஷ்மண முதலியார் | 2 |
| தாண்டவராய முதலியார் | 2 |
| கண்ணப்ப முதலியார் | 1 |
| கருணேச முதலியார் | 1 |
| அ. ஆறுமுக முதலியார் | 1 |
| வேலு. முருகப்ப முதலியார் | 1 |
| சிங்கார முதலியார் | 1 |
| | 54 |

கிடைக்கும். அந்தத் தண்டனையாவது, இங்கே என் பக்கத்தில் வெகு நேரம் காவலாக நீ இருக்கவேண்டியது தான்" என்று கூறிவிட்டுக் கரங்களை எடுத்தான்.


பேசிய குரலிலிருந்து கண்களைப் பொத்தியவர் தன் கணவரே எனத் தெரிந்துகொண்ட கனகவல்லி, "ஏது! தங்களிடமும் இந்த சேஷ்டை என்றுமில்லாமல் இன்று பலத்துவிட்டது?"

விஜய:—"கண்மணீ, கனகு! ஒன்றுமில்லை. இன்றையதினம் நம் வீட்டிற்கு எனதன்பிற்குரிய நேசன்-ஆருயிர் மித்திரன் விருந்திற்குவர இசைந்திருக்கிறான். அவன் இன்னும் சற்றுநேரத்திற்குள் வந்துவிடுவான். நமது குலத்திற்கோர் குலவிளக்காய்த் திகழும் அவனைப்போற் றூதார் இல்லை! அவன் கல்வி கேள்விகள் நிரம்பியவன்; ஆராய்ச்சியும் அனுபவமு மிக்கவன். அவன் இன்று நமது வீட்டுக்குவர நேர்ந்தது நமது நற்காலமேயாகும். சற்று நேரத்திற்குள் அவன் வந்துவிடுவான். கண்மணீ! அவனை வரவேற்க நீயும் தயாராக இருக்கவேண்டும். இந்த எனது ஆருயிர் நண்பன் வருகையில் நான் பெற்ற சந்தோஷத்தினுல் தான் இவ்வித சேஷ்டையை இன்று செய்ய நேர்ந்தது."


கனகு:—"நாதா! அவர் என்ன அத்தகைய மேன்மை யுடையவரா?"

விஜயம்:—"ஆம். அவன் வயதிலே எட்டு ஆண்டுகளே நிரம்பப் பெற்ற இளையவனுயினும் சகலகுண சம்பன்னன் ஏழை பங்காளன். தானே வலியசென்று உலக அனுபவங்களை ஒவ்வொருவருக்கும் விளக்கிக்கூறும் உத்தமன். அவன் செல்லாத இடம் இத்தமிழ்நாட்டில் எங்குமே இல்லை. தமிழ்நாடு மற்று மன்று. பல்லாயிர மைல்களுக் கப்பாலுள்ள வெளிநாடுகள் பலவற்றிலும் தாராளமாய்ச் சென்று உலாவி வருகிறான். செல்வச் சீமான்கள் முதல் பஞ்சைபனுதைகள் வரையில் அவனது நண்பர்களே. ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்கும் பெரிய உத்தியோகஸ்தர்கள் முதல் அரையணுவிற்குக் கூலிவேலை செய்யும் அற்பத்தொழிலாளர் வரை அவனது நேசர்களே. அவன் வருகையைக் கண்டதும் ஒவ்வொருவரும் அளவுகடந்த மகிழ்ச்சியுடன் கூடிக் குலாவி மகிழ்வார்கள். அவனுக்கு அனைவரும் ஒன்றே. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று சிறிதும் பார்க்கமாட்டான். எத்தகைய கனவானுயினும் தவறு செய்வராயின் அதனைப் பலரும் அறியுமாறு வெளிப்படுத்தி மீண்டும் அத்தவறு செய்யாதவாறு காக்கும் இயல்பினன். தேசப்பற்று நிறைந்த தியாகி. பிறர் பொருட்டே உழைக்கும் பெருமை மிக்கவன். அத்தகைய குணக்குரிசிலை நாம் இன்று பெறுதற் குரிய பாக்கியம் பெற்றது பெரும் புண்ணிய மல்லவா?"

கனகவல்லி:—"நாதா! அத்தகையவர் நமது விருந்ினராக வர நேர்வது நமக்கு பாக்கியமே. அவரது பெயரை எனக்கு அறிவிக்கக் கூடாதா?"




திரு. சி. வெ. சி. ராமலிங்க முதலியார் அவர்கள் சமீபத்தில் நடந்த தேர்தலில் ஈரோடு முனிசிபல் கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்.



திரு. T. K. N. நடேச முதலியார் அவர்கள் திருவாரூர், முனிசிபல் கவுன்சிலராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டவர்.




திரு. பெரி. ராம. நடராஜ முதலியார் அவர்கள்
இவர், மன்னார்குடி முனிசிபல் சேர்மனாக
19-11-34-ல் போட்டியின்றித்
தேர்ந்தெடுக்கப்பட்டார்.



திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்
இவர், திருவாரூர் வைஸ்சேர்மனாகப்
போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்
பெற்றார்.



திரு. T. V. அருணாசல முதலியார் அவர்கள்
சென்னை சைதாப்பேட்டை முனிசிபல்
கவுன்சிலராகப் பலத்த போட்டியினிடையே
தேர்ந்தெடுக்கப் பெற்றார்.



திரு. பட்டணம் மு. நாகரத்தின முதலியார்
அவர்கள்
இவர், சோளிங்கபுரம், யூனியன்
போர்டு தலைவராகவும், பஞ்சாயத்துக்கோர்ட்டு
தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்.



திரு. எம். வி. பீமராஜ முதலியார் அவர்கள்
சமீபத்தில் நடைபெற்ற குடியேற்றம் முனிசிபல் சேர்மன் தேர்தலில் இவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

விஜயம்:—"அதுதான் மறந்துவிட்டேன். அவன் வந்ததும் அவனையே கேட்டுத் தெரிவிக்கிறேன். கொஞ்சம் ஜலம் கொண்டுவா; எனக்குத் தாகமா யிருக்கிறது."

கனகம் கீழே சென்று ஜலம் கொண்டுவருவதற்குள் விஜயம் கீழிறங்கி வருவதைக்கண்டு "நாதா! ஏன் இறங்கிவிட்டீர்கள்!"

விஜய:—"கண்ணே! என் நண்பன் வந்துவிட்டான். மாடியில் சோபாவில் வீற்றிருக்கிறான். நீசென்று வார்த்தையாடிக்கொண்டிரு. நான் இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லி ஜலத்தை வாங்கிப் பருகிவிட்டு வெளியில் சென்றான்.

தனிமையில் விடப்பட்ட நம் கனகவல்லி "என்ன இது! ஒரு ஆண்பிள்ளை யிடத்தில் தனியாகப் பேசும்படி சொல்லிவிட்டுச் சென்றாரே! தனிமையாக எப்படி ஆண்பிள்ளை யிடத்தில் பேசுவது!" என்று தன் இயற்கை நாணத்தினால் முதலில் சற்று தயங்கினாள். ஆயினும் என் செய்வது! கணவன் உத்தரவை மீறலாமா?

'கணவன் சொல் கடவாதவர்களன்றோ கற்பரசிகள்' என்று எண்ணினவளாய் மேலே சென்று சோபாவை மறைந்து நின்று நோக்கினாள்.

சோபாவில் வீற்றிருந்த மித்திரனைப் பார்த்து அவள் மனதில் புதியதோர் உணர்ச்சி உண்டாயிற்று. முகத்தில் மகிழ்ச்சிக்குறி அரும்பியது. அதரங்களில் புன்னகை தவழ்ந்தது.

அளவிலாக் காதல் கொண்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து இரு கைகளாலும் வாரி யெடுத்துக் கண்களில் ஒத்தி முத்தங்க ளீந்தாள். வெகுநேரம் வரையில் அவள் கீழே இறங்கவேயில்லை. கீழே கணவன் திரும்பி வந்து, கனகா !கனகா ! எனப் பலமுறை அழைத்ததும் அவளது செவியில் நுழையவே இல்லை.

"இன்னுமா இங்கே இருக்கிறாய்; மணி பன்னிரண்டாய்விட்டதே! சமையல் செய்தாயிற்றா?" என்று கேட்டுக்கொண்டே விஜயம் மேலே வந்தபோதுதான் அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்; உச்சி வேளை ஆய்விட்டதென்பதை அப்பொழுதுதான் உணர்ந்தாள்.

இவ்வாறு அவள் தனது முழு மனதையும் செலுத்திக் குலவி மகிழ்வதற்குரிய அன்பன் யாரென நினைக்கிறீர்கள். அறிஞர் மாணிக்க வாசகரால் அழகாக அலங்கரித்து மாதந்தோறும் அனுப்பப் பெறுகிற நமது செல்வச் சிறுவன் '**செங்குந்த மித்திரனே**' யாகும்.

இவ்வாறு பொழுது போவதும் தெரியாமல், கணவ னழைப்பதும் கேளாமல் கனகத்தின் முழு மனதையுங் கவர்ந்த மித்திரனை செங்குந்த ரனைவரும் தவறாது வரவழைத்து ஏன் இன்புறக்கூடாது?

# ஸ்தல ஸ்தாபனத் தேர்தலில் செங்குந்தர் வெற்றி

### மன்னார்குடி நகர சபைத் தலைவர்

தஞ்சை ஜில்லாவிலுள்ள மன்னார்குடி நகர சபைத் தலைவர் தேர்தல் 19-11-34-ந் தேதி நடைபெற்றது. நமது சமூக இயக்கத்தில் அளவு கடந்த பற்று நிரம்பியவரும், திருவாரூரில் நடைபெற்ற நமது நான்காவது வர்த்தகர் மகாநாட்டின் திறப்புரை யாற்றியவரும், தமதூரில் அவ்வப்போது நன்கொடை வசூலித்து உதவி வரும் குலாபிமானப் பெரியாருமாகிய ஸ்ரீ. பெரி. ராம. நடராஜ முதலியார் அவர்கள் போட்டியில்லாமல் முனிசிபல் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

இவர் சுமார் 15 வருஷங்களாக இவ்வூர் நகரசபை அங்கத்தினராக இருந்து வருகிறார். இவர் ஏழைகளிடம் மிக்க கருணை யுள்ளவர். இதற்குமுன் ஆதிதிராவிடர்களின் சேரிக்குச் சென்று அங்கு முனிஸிபல் லாந்தர் போடவும், தெருக்களைச் சீர்திருத்தம் செய்யவும் ஏற்பாடு செய்ததோடு அவர்கள் வீடு ஒவ்வொன்றிற்கும் சென்று அவர்களை நாகரீக முறையில் திருத்தியும், அவர்கள் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க ஏற்பாடுகள் செய்தும் இருக்கிறார். பொது ஜனத் தொண்டில் மிகவும் பற்றுடையவரெனக் கருதியே இவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத் திருக்கின்றனர் போலும். இன்னும், இவரது பொது ஜனத்தொண்டு பெருகவும், அதனால் வரும் புகழ் நம்மரபிற் கெய்தவும் போதிய ஆயுளும், கல்வியும், செல்வமும் உண்டாக ஆண்டவன் அருள் செய்வாராக.

9-12-34 மேற்படி சேர்மன் P. R. R. M. நடராஜ முதலியார் அவர்களுக்கு மேற்படியூர் செங்குந்த வர்த்தக சங்கத்தாரால் M. R. Ry, K. S. S. சிவசுப்பிரமணிய அய்யர் M. L. C. அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஓர் தேக்கச்சேரி விருந்து அளிக்கப் பட்டது. அதுபோது திருவாரூர் வைஸ் சேர்மென் T. N. சபாபதி முதலியார் அவர்களும், பிரபல வர்த்தகர்களும், உத்தியோகஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர். பிறகு M.R.Ry., T. N. சபாபதி முதலியார்அவர்கள், 'முனிசிபல் சீர்திருத்தம்' என்பதுபற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தியபின், நம் மரபினரென்ற அபிமானத்தின் பேரில் ஸ்ரீநடராஜ முதலியார் அவர்களுக்குப் பொன்னின் மணியால் ஓர்மாலை சூட்டினார்.

பின்பு அனேக கனவான்கள் சொற்பொழிவு நிகழ்த்தியபின் தலைவர் முடிவுரை கூற கூட்டம் இனிது முடிந்தது.



### திருவாரூர்

திருவாரூர் முனிசிபல் வைஸ் சேர்மன் தேர்தல் முனிசிபல் தலைவர் ஸ்ரீ ராமானுஜ முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நமது சமூக இயக்கத்தின் ஆரம்ப கர்த்தரும், நமது மித்திரன் சோர்வுறாதபடி அவ்வப்போது வேண்டும் உதவிகள் பல புரிந்து வருபவருமாகிய வள்ளல் T. N. சபாபதி முதலியார் அவர்கள் போட்டியின்றி வைஸ் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

### குடவாசல் யூனியன் போர்டு

ஷை போர்டு வைஸ் பிரசிடெண்டு தேர்தல் 21-11-34 ல் ஷை போர்டு பிரசிடெண்டு தலைமையின் கீழ் நடைபெற்றது.

ஷை போர்டு மெம்பர் அய்யாரு வேலு உடையாரால் N. S. G. உத்திராபதி முதலியார் பெயர் பிரேரேபிக்கப்பட்டு, ஷை போர்டு மெம்பர் கதிர்வேலுப் பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டு போட்டியன்னியில் ஏகமனதாக, N. S. G. ருத்திராபதி முதலியார் வைஸ் பிரசிடெண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### பெருந்தலையூர்

பெருந்தலையூர் கிராமத்தில் P. P. மாரிமுத்து முதலியார் ஷை கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட் பிரஸிடெண்டாகவும், ராமசாமி முதலியார் பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பராவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

### எலத்தூர்

எலத்தூர் கிராமம் செட்டிபாளையம், C. M. அருணாசல முதலியார் (மாஜி தாலூகா போர்டு மெம்மர்) ஷை கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டு பிரஸிடெண்டாகவும், C. M. அண்ணாமலை முதலியார் எலத்தூர் பஞ்சாயத்து போர்டு பிரஸிடெண்டாகவும், நம்பியூர் லோகல் கோவாபரேடிவ் யூனியன் செக்ரெடரியாகவும், C. M. ராமசாமி முதலியார் ஷை போர்டு மெம்பராகவும், புது அய்யன் பாளையம் K. சோமசுந்திர முதலியார் மொட்டணம் பஞ்சாயத்துக் கோர்ட்டு பிரஸிடெண்டாகவும், நம்பியூர் லோகல் கோவாபரேடிவ் யூனியன் டைரெக்டராகவும் இருந்து வருகிறார்கள்.

# குஞ்சிதபாத தரிசனம்

## கும்மி மெட்டு

(மா. அ. க.)

குஞ்சித பாதத்தைக் கண்டோமே இன்று
கூடியே ஆநந்தம் கொண்டோமே.

முப்பத்து முக்கோடி தேவர்களும் நல்ல
முளரிவந்த ஓர் நான்முகனும்
எப்போதும் லக்ஷ்மி தங்கிய மார்பனும்
எல்லவரும் தேடிக் காணரிய— (குஞ்சித)

மன்னு பதஞ்சலி வியாக்கிர பாதரும்
மாறாது நின்று வணங்கிடவும்
துன்னும் அடியவர் தூவவும் நான்மலர்
தூக்கியே மன்றினில் ஆடுகின்ற— (குஞ்சித)

ஓதிய நான்மறை வல்லோ ரும்மிக
ஓங்கு தவங்கள் புரிந்தோரும்
நேதி களைந்திடும் நேர்மையரும் என்றும்
நேடியும் காணரி தாயஒரு— (குஞ்சித)

துடியமைந்த கரம் தோற்றுதல் செய்யவும்
தோன்றிய காக்க அமைத்தகரம் !
மடித்திட அங்கியைத் தாங்கிய ஓர்கரம்
மறைக்கவும் ஊன்றுகால் இனிதருளும்—(குஞ்சித)

சின்னஞ் சிறுகுழந் தைக்குற்ற நோயினுக்
கன்னை யவள்மருந் துண்பதுபோல்
மன்னுயிர் தங்களுக் கின்னருள் பாலிக்க
மங்கை சிவகாமி மன்றிற்காணும்— (குஞ்சித)

அரிய தவங்களுந் தாங்கிடந்து பல
ஆறு குளங்களி லேபடிந்து
பெரியவர் தங்கள் மொழிகேட்டு பேணு
பேரம்ப லந்தன்னி லேசென்று— (குஞ்சித)

மாற்றரி யாதபொன் னம்பலம் தன்னிலே
மாணிக்க வாசகர் அப்பர்முதல்
போற்றும் பெருந்தகை யாளர்கள் எல்லோரும்
பூசனை செய்து பரவுகின்ற— (குஞ்சித)

# காங்கிரஸ் வாதிகளுக்கோர் வேண்டுகோள்

இந்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள
தமிழ்நாட்டு காங்கிரஸ் வாதிகளே!

நீங்கள் இன்று பூரணமாக வெற்றி வாகை சூடி யிருக்கிறீர்கள். அதுவும், மகாத்மா காந்தி யடிகளால் போஷித்து வளர்க்கப்பட்ட தேசிய காங்கிரஸ் மகாசபையின் பெரிய செல்வாக்கைப் பெற்றே நீங்கள் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். தமிழ்நாட்டாரின் பெரும்பான்மையான ஆதரவைப் பெற்று தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள நீங்கள் இனி மிகப்பெரிய பொருப்பைத் தாங்கவேண்டியவர்களா யிருக்கிறீர்கள். இதுவரையில் நீங்கள் செய்த சேவையும், ஆற்றிய தியாகங்களும் மிகச் சிறியதெனவே இனி மக்களால் கருதப்படும். இன்று பெற்ற வெற்றியை நினைத்து நீங்கள் மயங்கி விடுவீர்களானால் மக்களின் மனோநிலை வெகு விரைவில் மாறுத லடைந்துவிடக் கூடும். எனவே, இனி உங்கள் நடத்தை மிகமிகத் தூய்மையாக, காந்தி யடிகளைப்போல் துல்லியமாக இருந்து தீரவேண்டும். பரிபூரணத் தியாகம் உங்களிடம் இலங்கவேண்டும். தேச சேவையில் சோர்வோ, பட்டம் பதவிகளில் ஆசையோ, புகழில் நாட்டமோ, சுயநல மோகமோ உங்களிடை அணுவளவேனும் எழுதல் கூடாது. அப்படி ஏதாவது ஏமாற்றம் செய்து விடுவீர்களாயின் மகத்தான காங்கிரஸ் மகாசபை மாசடையும். அதன் தூய்மையும் வலிமையும் குன்றும். காந்திஜியின் அன்புளம் துன்புறும். தேசமக்க ளனைவரும் காங்கிரஸ்மீது வெறுப்புறுவர். ஆதலின், தோழர்களே! இகழ்ச்சிக் கிடங்கொடாமல் தேச மக்களின் நம்பிக்கை யென்னும் பெரும் பொருப்பை மிக்க கவனமாகக் காப்பாற்றி வருவீர்களாக. வெற்றியி னிடையே அடக்கம், வணக்கம், அன்பு, க்ஷமை ஆகிய பெருங்குணங்களைக் காண்பிப்பது பெரியோர் குணம் என்பதை மனத்திற் கொள்ளுங்கள்.

முக்கியமாக நமது தென்னிந்தியாவில், ராஜீய உலகத்தில், பிராமணர்—பிராமணரல்லாதாருக்குள் மனக்கசப்பு மிகுந்துள்ள தென்பது ஒளிக்காமல் ஒப்புக்கொள்ளவேண்டிய உண்மையாகும். பெரும்பான்மையான பிராம்மணரல்லாதவர்கள் வகுப்புத் துவேஷத்தை விட்டு இத்தேர்தலில் நடந்துகொண்டதால், அந்தத் துவேஷம் அழிந்து அனைவரும் ஆன்ம

நேயர் ஆகிவிட்டனரென எண்ணிவிடவேண்டாம். தேர்தலில் தமது மனக் கசப்பைக் காட்டாது அவர்கள் ஒன்றுபட்டு வாக்களித்தமைக்கு முக்கிய காரணம், நமது தேசியப் போராட்டத்தை—மகாத்மாஜியின் சத்தியாக்கிரக யுத்தத்தை உலகம் நன்கு கவனித்துவரும் இச்சமயத்தில் தேசத்தைக் காட்டிக்கொடுக்கக் கூடாதென்பதும், இந்தியர்கள் பூரண விடுதலையை விரும்புகிறார்களென்பதை இங்கிலாந்துக்கும், மற்றைய நாடுகளுக்கும் ஸ்பஷ்டமாகக் காட்டிவிட வேண்டுமென்பதுமாகிய எண்ணங்களே யாகும். எனவே, இந்தத் தேர்தல் வெற்றியைக் கொண்டு தென்னிந்தியாவின் ராஜீயத் துறையிலுள்ள சமூக மனக்கசப்பு ஒழிந்துவிட்டதென அலட்சியமா யிருந்துவிடாதீர்கள்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யரவர்கள் தனது வெற்றியின் பின் பேசும் பேச்சுக்களனைத்தும் பெரும்பாலும் மனக்கசப்பை வளர்ப்பனவாகவும், பிராமணரல்லாதாருக்குள் உணர்ச்சியை எழுப்புவனவாகவு மிருக்கின்றன. அவற்றை அறவே நீக்கி ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் உள்பட சகல காங்கிரஸ் தலைவர்களும், அங்கத்தினர்களும், அபிமானிகளும் (முக்கியமாக பிராம்மண அங்கத்தினரனைவரும்) மிகவும் நேர்மையுடனும், சுயநல மற்ற பரிசுத்த உள்ளத்துடனும் பிராம்மணரல்லாத தலைவர்களுடன் சமாதானம் செய்துகொண்டு, அவர்கள் இதுவரை செய்த சேவைகளுக்கும், தியாகங்களுக்கும் உண்மைப் பெருமைகளை யளித்து, தென்னிந்தியாவில் ஏகோபித்த மிகக் கட்டுப்பாடான, வேற்றுமையற்ற, கம்பீரமான காங்கிரஸ் கூட்டத்தை நடத்துவித்து, தேசநலத்தை உண்மையில் காப்பாற்ற வேண்டும் என தேசத்தின் பேரால், பாரதியின் பேரால், தமிழ்த்தாயின் பேரால், காந்திஜீயின் பேரால் வேண்டிக்கொள்ளுகிறேன்.

தேசாபிமானமுள்ள தென்னிந்தியன்

குடும்ப நண்பன், சமய சஞ்சீவி

**கனகேசம் பாம்**

என்பதில் தடையென்ன? அதைத் தேய்த்தவுடன் எல்லாவித தலைநோய், இடுப்பு கை கால் வலி, வாதநோய்கள், வீக்கம், சுளுக்கு, ரணம், விஷக்கடிகள் ஆகியவை நீங்கள் ஆச்சரியப்படுமாறு பறந்து போகும்.

கனகேசம் & கோ., பவழக்காரத் தெரு, சென்னை.

## விகடத் துணுக்குகள்

முனியன்:—முத்தா, நீ கொண்டுவரும் கழுதை சுத்த முட்டாள்தனமாக என்னைப் பார்த்ததும் கனைக்கிறது.

முத்தன்:—சிநேகிதர்கள் சந்திப்பதால் சந்தோஷத்தைக் காண்பிக்கவேண்டாமா?

—T. M. செங்கோடன், திருச்செங்கோடு.

* * *

நியாயாதிபதி:—அடே, நீ இதுவரை எத்தனைதடவை ஜெயிலுக்குப்போயிருக்கிறாய்?

குற்றவாளி:—ஐந்தாறு தடவை இருக்கலாம்.

நியாயாதிபதி:—அப்படியானால் இந்தத்தடவை உனக்கு அதிகமான தண்டனை விதிக்கவேண்டும்.

குற்றவாளி:—எஜமானே! வழக்கமாக வருகிறவர்களுக்கு ஏதாவது கமிஷன் தள்ளிக்கொடுக்க வேண்டியதுதான் நியாயம்; அதிகமாகக் கொடுப்பது நியாயமல்ல.

—N. P. கிருஷ்ணன், ஆரணி சைதாப்பேட்டை.

* * *

வைத்தியர்:—குடியையும், சுருட்டுப் புகைத்தலையும் விட்டு நேரத்துடன் படுக்கைக்குச் சென்று அதிகாலையில் எழுந்திருப்பதே உனக்குத் திறமான மருந்து.

நோயாளி:—அவ்வாறாயின் நான் அந்தத் திறமான மருந்துக்குத் தகுதியற்றவன். வேறொரு மருந்து சொல்லுங்கள்.

—T. வேலுப்பிள்ளை, கொளும்பு.

* * *

பரீட்சகர்:—மின்சாரத்திற்கும், மின்னலுக்கும் என்ன வித்தியாசம்?

மாணவன்:—(அவசரமாக) மின்சாரத்திற்கு ஏராளமாகச் செலவாகும்; மின்னலுக்குத் தம்பிடிகூடச் செலுத்தவேண்டியதில்லை.

—T. வேலுப்பிள்ளை, கொளும்பு.

* * *

புருடன்:—எண்டி பிணமே! நான் உன்னை மணம்செய்தபோது உன் காதில் ஒரு துடப்பச் சுப்பல்கூட இல்லையே!

மனைவி:—இருந்ததென்று யார் சொன்னா? துடப்பச் சுப்பலெல்லாம் உன்னைக் கட்டிக்கொண்டு இங்கே வந்த பிறகுதான்.

—G. K. வேல், ஆரணி சைதாப்பேட்டை.

உபாத்தியாயர்:—எண்டா, ராமா! புஸ்தகத்தில் எண்ணெ பட்டிருக்கிறது?

ராமன்:—நான் புஸ்தகத்தை எப்போதும் தலையிலேயே வைத்திருக்கிறது வழக்கம் சார், அதனால் தலையிலுள்ள எண்ணெ பட்டிருக்கிறது, சார்.

உபாத்தியாயர்:—எண்டா தலையில் வைத்திருக்கிறாய்?

பையன்:—நாம் படிப்பதெல்லாம் மூளைக்குப் போவுதுன்னு சொன்னீங்களே சார்; படிக்காமலே புஸ்தகத்திலுள்ள எழுத்தெல்லாம் மூளையிலே ஏறிவிடட்டும் என்றுதான் தலையிலே வச்சிருக்கிறேன்.

—M. சண்முகசுவாமி, கடலூர்

* * *

உபாத்தியாயர்:—மனிதனுடைய கண்ணுக்கும், யானையினுடைய கண்ணுக்கும் என்ன வித்தியாசம்?

பையன்:—மனிதனுடைய கண்ணுக்குக் கண்ணாடி போடலாம், யானையின் கண்ணுக்குப் போடமுடியாது, சார்.

—A. N. கமலநாதன் அம்மையப்பட்டு.

* * *

புருடன்:—கண்ணே! உன்னைப் பார்க்காமல் என் கண்கள் இரண்டும் பூத்துப் போயிற்று

மனைவி:—காய்த்துப் பழமாக இன்னும் எத்தனை நாட்களாகும்?

—S. R. வேல்சாமி, சிவகிரி.

* * *

தகப்பனார்:—டே கிட்டு! எண்டா இன்றைக்குக் குளிக்கவில்லை?

கிட்டு:—மழை பெய்கிறது, குளிரா யிருக்கிறது அப்பா.

தாயார்:—குளிரா யிருந்தால் சட்டை போட்டுக்கொண்டு குளிக்கிறது தானே!

—'சும்மா' சிலோன்.

* * *

இந்திரபோகம்:—மழை அதிகமாய்ப் பெய்கிறது, வெளியே சென்ற என் காதலி வரவில்லையே.

நண்பன்:—கஷ்டப்படாதீர். எதாவது ஒருகடையில் தங்கி யிருப்பாள்

இ-போகம்:—ஓ! அதுதான் என்னைக் கஷ்டப்படுத்துகிறது. ஏதேனும் செலவுக்கு வழி வைத்துக்கொண்டு வருவாளே!

—A. தம்பிரான், திருவந்திபுரம்.

* * *

தாதா:—டே! வால் மிளகு நான்கு அணாவிற்கு வாங்கிவா.

பையன்:—தாதா! மிளகு வாங்கிவா என்றால் போதாதா? என்னை வால் என்று கூப்பிடுகிறீர்களே.

—* D. நாச்சிமுத்து, ஈரோடு.

* பரிசுபெற்ற விகடம்.

# எனது அதிர்ஷ்டம்

(எ. முனிசாமி, கலவை)

(அக்டோபர் இதழ், 584-ம் பக்கத் தொடர்ச்சி)

சாந்தலிங்க முதலியா ரென்னும் பூமான் அவ்வூரில் மிகவும் சிறப்புற்றவர். சகல நற்குணங்களும் ஒருங்கே யமையப்பெற்ற அவர், பல குமாஸ்தாக்களுடன் தனது வீட்டிலேயே பட்டு மளிகை வைத்து பிரபலமான வியாபாரம் நடத்துபவர். என்னையு மத்துறையிலேயே பழக்கிவந்தார். துன்பத்திற்குப் பின் இன்பம் தொடர்வது போல், எனது உடன்பிறப்பாக இருந்துவந்த சோம்பலையும் மூதேவியையும் அதிர்ஷ்ட தேவதை அடித்துத் துரத்திவிட்டாள். சுருசுருப்பையும், வேலையில் ஆர்வத்தையும் என்னிடம் தோற்றுவித்தாள். கூடியவரை திறமையாகவும், நாணயமாகவும் நான் நடந்துவந்த மாதிரியால் முதலியாருக்கு என்மீதில் அன்பும் நம்பிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன. சில வாரங்கள் கழிந்தன.

"நூறு ரூபா வேண்டும்; கடலைக்கா யிருக்கிறது; கேட்டபடி தருகிறேன்" என்று கேட்டுக்கொண்டே வந்தார் ஒரு விவசாயி. நான், முதலியார் உத்தரவுபெற்று ரூபாய்க்கு பத்து மரக்கால் விகிதம் வாங்கினேன். மூன்று மாதங் கடந்தன. ஆச்சரியப்படும்படி மூன்று மரக்காலுக்குப் போட்டிபோட்டு வேண்டுகிறார்கள். அதிக ஆசை உதவாதென்று அளந்துவிட்டோம். அன்றே 333 ரூபாய்க்கு அதிபதியாகிவிட்டேன். பிறகு தோல் வியாபாரம் செய்ததில் சில மாதங்களில் ஆயிரத்தி முன்னூறு ரூபாய் லாபம் கிடைத்தது. அதன்பின் ஓர் நாள் மாலை 3 மணிக்கு முதலியார் விலாசத்திற்கு இரு தந்திகள் வந்தன. அவற்றில் கீழ்வருமாறு வரைந்திருந்தது. 5,000 பவுன், முதல் பிரைஸ் பெற்ற அதிர்ஷ்டமான ஆத்மநாதன், சாந்தலிங்க முதலியார் மேல் பார்த்து என்றும், 1,000 பவுன் மூன்றாவது பிரைஸ் பெற்ற முத்துலக்ஷ்மி, சாந்தலிங்க முதலியார் குமாரத்தி என்றுமிருந்தது. இதைக் கேட்ட எனது மனோநிலை எவ்வாறிருந்திருக்கு மென்பதை வாசகர்களறிவார்களே யன்றி என்னால் விளக்கிக் கூற சரியான வார்த்தைகள் கிடைக்கவில்லை. 5,000 பவுன் எனக்கு எப்படிக் கிடைத்தது தெரியுமா? ஆறுமாதங்களுக்கு முன் சீமையிலிருந்து முதலியாருக்கு வந்த ஒரு தருமநிதி லாட்டரிச் சீட்டில் முதலியார் வற்புறுத்தலுக்காக நான் ஒன்று கட்டினேன். அதில் முதல் பிரைஸ் எனக்குக் கிடைத்ததோடு முதலியாரை காலியாக்கி விடாமல் 1,000 பவுன் அவருக்கும் கிடைத்ததைக் குறித்து மிக மகிழ்ந்தேன். மறுதினமே 6,000 பவுனும் வீட்டைத்தேடி வந்து விழுந்தது. இதன் பயன்தானோ என்னவோ ஒரு மாதத்திற்குள்ளே பவுன் விலை ஏறத் தொடங்கி 22½ ரூபாயை எட்டிப் பார்த்துவிட்டது. எனவே பவுன் மதிப்புப்படி ஒரு லட்சத்தி முப்பத்தெட்டாயிரம் ரூபாய் எங்களிடம் சரணாகதி யடைந்

தது. பணத்தை இருவரும் சமமாகப் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்பது எனது விருப்பம். முதலியார் அதற்கிசையவில்லை. ஒருநாள் அவ்வூர் பஜாரிலுள்ள இரண்டடுக்கு மாடி வீடும், ஒரு வேலி நிலமும் ஏலம் விடப்படுமென்று வீதியில் தண்டோரா போடப்பட்டது. வீடு 15½ ஆயிரத்திற்கும், நிலம் 17 ஆயிரத்திற்கும் நாங்களே எடுத்து பணத்தையுங் கட்டிவிட்டோம். ஒரு நாள் கணக்குப் பார்த்து அவருடைய ஆயிரம் பவுனுக்குச் சேரவேண்டியதை எடுத்துக்கொண்டு மற்றத் தொகையை என்னிடங் கொடுத்து என்னைத் தனியாக வியாபாரஞ் செய்யும்படிக் கூறினார். நானும் சம்மதித்தேன். மறுதினமே சாயக் கம்பெனியைத் துவக்கினேன். புது முறையில் விளம்பரம் செய்தமையாலும், நாணயமாக நடந்துகொண்டதாலும் வெகு விரைவில் எனது வியாபாரம் நல்ல பலனை யளித்தது. எனது நன்னடக்கையாலும், சிறு பிள்ளைகளிடமும் நான் காட்டி வந்த அன்பினாலும் உள்ளூரிலுள்ளவர்களேயன்றி சுற்றுப்பக்கங்களிலுள்ள பொது ஜனங்களும் என்மீதில் அன்பும், அபிமானமும் காட்டி ஆதரித்தனர்.

ஒரு நாள் பகல் ஒரு மணி யிருக்கும். எனது வீட்டைக் கேட்டுக்கொண்டே ஒரு பெரியார் உள்ளே வந்தார். அவரைக் கண்டதும் என் உள்ளம் உருகியது. அவர் பசியால் மிகவுங் களைத்தவர் போலக் காணப்பட்டார். அவருக்கு உணவளித்த பின் அவரது க்ஷேமலாபங்களை விசாரிக்கத் தொடங்கினேன்.

சுமார் 6 வருஷத்திற்கு முன் வெளிப்பட்ட தன் மகனைத் தேடி வந்ததாகவும், அவன் வெளிப்பட்ட காரணம் இன்னதென்றும் அவர் கூறியபோது 'ஆ! எனது தந்தையே!' என்று கட்டித் தழுவிக்கொண்டேன். என்னைக் கண்ட ஆநந்தத்தில் அவரும் முழுகிவிட்டார். ஒரு காலத்தில் என்னைச் சேற்றில் அழுத்திய என் தந்தையை இன்று நான் சந்தோஷத்தில் அழுத்திவிட்டேன். நான் பிரிந்த பின் சில மாதங்களில் என் சிற்றன்னையும் இறந்துவிட்டதாகவும், அதன்பின் என்னைத் தேடி அலைந்து வருவதாகவும் கேட்டு மிக வருந்தினேன். விரைவிலேயே என் விருப்பத்திற்கேற்ப சாந்தலிக்க முதலியாரின் பெண்ணை எனக்கு மணமுடித்துவைத்தார். மணம் மிகச் சிக்கன முறையில் தற்கால நாகரிகத்திற்கேற்ப சாந்தலிங்க முதலியாரால் நடத்தப்பட்டது. என் தந்தை என்னிடத்திலேயே தங்கிவிட்டார்.

நான் இப்போது நாலைந்து பிள்ளைகளுக்குத் தந்தையாய், இவ்வூர் நகராண்மைக் கழகத்தின் தலைவராய், சென்னை சட்ட சபையின் அங்கத்தினராய் இருக்கிறேன். என்னை அங்கத்தினராகப் பெறாத சபைகளோ கழகங்களோ இப்போது இந்தப் பக்கங்களில் கிடையாதெனக் கூறலாம்.

நான். இன்று, காதலிருவர் 'கருத்தொருமித்த இன்ப வாழ்க்கையை நடத்தி வருகிறேன். மூதேவி அன்னைக்கு மும்முரமாய் வேலை கொடுத்து வந்தவன் இன்று சாப்பிடவும் நேர மில்லாமல் பல பொதுக் காரியங்களில் ஈடுபட்டு இராப் பகலாய் உழைத்து வருகிறேன். 'எனது அதிர்ஷ்டத்தைப் பார்த்தீர்களா? அதில் நீங்கள் பங்கு கேட்டுவிடாதீர்கள்.

# இளம்பூரணன்

(வ. த. கோவிந்தசாமி, காஞ்சீபுரம்)

நல்லூர் என்பது ஒரு பெரிய நகரம். அதன் சமீபத்தில் காவிரியாறு செல்லுகிறது. நீர்வளம், நிலவளம் அனைத்தும் நிரம்பப் பெற்றது. அந்நகரைப் பாதுகாப்பதுபோல் பல அழகிய நந்தவனங்களும், தோப்புகளும் சூழ்ந்துள்ளன. பல வியாபாரங்களுக்கு அது மத்திய யிடமாய் விளங்குவது. புதிய நாகரிகம் அமைந்துள்ளது. பொதுவாகச் சொல்லவேண்டுமானால் அந்நகரில் இல்லாத சிறப்பு வேறெங்கும் இல்லையென்றே சொல்லலாம்.

அந்நகர மக்களுள் ஒரு பெரும் பொருளாளி. தமிழறிவு நிரம்பப் பெற்றவர். மிகுந்த தருமம் செய்பவர். பல வியாபாரங்கள் செய்து பெரும் பொருள் சேகரித்துள்ளவர். ஒரு பிரபலஸ்தர். பிடிவாத குணமுடையவர். மிக்க வைதீகமுடைய சைவர். சாத்திரங்களினின்றும் ஓர் எள்ளத்தனையும் பிறழாதவர். சைவ வேளாள மரபினர். சுமார் 50 வயதுடையவர். அவர் பெயர் சுந்தரம் பிள்ளையாகும்.

சுந்தரம் பிள்ளைக்கு ஒரே ஒரு பெண் உண்டு. வயது 9. அப்பெண் பிறந்த 4-வது வயதில் அவளது தாயார் காலகதியடைந்தார். பின் சுந்தரம் பிள்ளை இரண்டாந் தாரம் மணம் செய்துகொள்ள மறுத்துவிட்டார். அவர் பெண் மிக அழகுடையவள். அவ்வழகைச் சிறப்பித்து சுருக்கிக் கூற வேண்டினால், தேர்ச்சி பெற்ற ஓர் சிற்பி தனது முழுத் திறமும் காட்ட தங்கத்தால் ஒரு உருவத்தை நீண்ட கால உழைப்பினால் செய்து முடித்தால் எவ்வாறிருக்குமோ அவ்வளவு வடிவழகி என்றுதான் கூற வேண்டும். அவ்வழகியின் பெயர் சௌந்தரம். அப்பெண்ணை சுந்தரம் பிள்ளை உயிரினும் உயர்வாக மதித்து வந்தார். ஆனால், அப்பெண்ணை 40 வயதுள்ள கைலாசம் பிள்ளை என்னும் தனது மைத்துனருக்கு இரண்டாந் தாரமாக மணம் செய்து கொடுத்ததுதான் சகிக்கக் கூடாததாகும். அம் மணமகன் கைலாசம் பிள்ளைக்குக் காசநோயுண்டு. இது 'ஊழின் வலி' போலும்.

சௌந்தரத்திற்கு வயது 12 ஆயிற்று. பருவமடையும் காலத்தை எதிர்பார்த்து நிற்கிறாள். எனினும், அவள் கணவன் கைலாசம் பிள்ளைக்குக் காசநோய் நாளுக்கு நாள் அதிகப்பட்டது. சித்தவயித்தியம், ஆயுர்வேதம், யூனானி, ஆங்கிலவயித்தியம்; ஒருவரல்ல, இருவரல்ல, பல வைத்தியர்களிடமும் பார்த்தாய்விட்டது. ஒன்றும் பயனில்லை. கைலாசம்பிள்ளை கைலாசத்தை எதிர்நோக்குகிறார். சில மாதங்கள் கழிந்தன.

சௌந்தரம் பருவமடைந்தாள். 9-ம் நாள் சௌந்தரத்திற்கு புஷ்பணி முகூர்த்தம் ஏற்பாடாயிற்று. பந்து மித்திரர்கள் பெருங் கூட்டமாய் வந்திருந்தனர். கை தேர்ந்த வேலைக்காரர்களால் செய்

யப்பட்ட அழகிய கண்ணைக் கவரும் மணவறை அலங்கரிக்கப்பட்டது. அதனுள் தாமரை யிலையில் இலக்ஷ்மி என விளங்கப்போகிறாள் நமது சௌந்தரம். அனைவரும் ஆநந்தத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள்.

அச்சமயம் கைலாசம் பிள்ளையின் காசநோய் மிக ஆபத்தாகிவிட்டது. அவர் படுக்கையில் அசைவற்றுக் கிடக்கிறார். அருகே பல வயித்தியர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கிறார்கள். சுந்தரம் பிள்ளை சமீபத்தில் நிற்கிறார். அவரது மகிழ்ச்சி யனைத்தும் மாண்டது. துன்பமே உருவெடுத்தாற்போல் விளங்கினார். கைலாசம் பிள்ளை முகத்தில் சாக்குறி உதயமாகிவிட்டது. மெள்ள வாயைத் திறக்கிறார். மெல்லிய குரலில் ஒரு முறை சௌந்தரம்!.......... இரண்டாமுறை சௌந்தரம்! எனக் கூப்பிடுகிறார். சௌந்தரம் மணவறையை நோக்க நன்முகூர்த்தத்தை எதிர்பார்த்திருக்கிறாள். மூன்று முறை சௌந்தரம்! கண்கள் சுழலுகின்றன. நீர் வடிகிறது. ஆவி தடுமாறுகிறது. மூச்சு நிற்கிறது. ஆ! வாழ்நாள் முடிவடைந்து விட்டது. சுந்தரம் பிள்ளை அடியற்ற மரம்போல் கீழே சாய்ந்தார். வயித்தியர்கள் விலகினார்கள். உறவின்முறையார் சூழ்ந்தார்கள். ஓ! என்ற பெரிய அழுகுரல். இழவு கொண்டாட்டம். ‘ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்’ என்கிற வாய் வேதாந்தப்பேச்சு. இதனிலும் காணவேண்டிய கொடுங் காட்சி வேறு வேண்டுவதில்லை. சௌந்தரத்தைப் பலரும் கட்டி அழுதுத் தொலைத்தார்கள். சுந்தரம் பிள்ளை தன் மகளுக்கு நேர்ந்த கதியை எண்ணி எண்ணித் துரும்பென இளைத்துவிட்டார். ஆண்டுகள் சில அகன்றன.

2

வசந்த காலம். காலை சுமார் 6 மணி. சூரியன் தனது இளங்கதிர்களை வெளிக்காட்டி வர முயற்சிக்கிறான். காவிரியாற்றின் ஒருபுறம் தெள்ளத்தெளிந்த நீர் சிலு சிலுவென ஓடுகிறது. ஆற்றின் வடபுறமிருந்து ஒரு வாலிபன் தெற்கு நோக்கி ஆற்றைக்கடந்து வருகிறான். அவன் விரிந்த நெற்றி, அகன்ற மார்பு, கூரிய பார்வை, சீரிய நினைவு, மாசகன்ற உள்ளம், பொன் போன்ற வடிவம், புன்னகை பூத்த வதனம் வாய்ந்த சுமார் வயது 22 நிரம்பப்பெற்ற ஓர் கட்டழகன்; இளம்பூரணன் என்னும் பெயரை யுடையவன்.

அந்த நதியின் தெற்குக்கரையில் சுமார் 15 வயதுடைய ஓர் இளமங்கை; செந்தாமரை போன்ற முகம், நெளிந்து சுருண்டு நீண்ட கரியகூந்தல், மூன்றாம்பிறைச் சந்திரனைப்போன்ற அழகிய நெற்றி, வில்லைப்போன்ற புருவம், பவழம்போன்ற இதழ், சங்கு போன்ற கழுத்து, அதற்கேற்ற உருவ அமைப்பு; இவையெல்லாம் பெற்றிருந்தும் பொலிவழிந்த கண்கள், வாடி வருந்தி மெலிந்து துவண்ட மெல்லிய மேனி, மலர்ச்சியற்ற வதனம் இவை வாய்க்கப்பெற்ற ஒரு விதவை, தான் கொண்டுவந்த குடத்தை ஆற்றங்கரையில் வைத்து நீராடிக் கொண்டிருக்கிறாள்.

இளம்பூரணன், அம்மங்கை நீராடுந் துறையை வழியாகக்கொண்டு வருகிறான். அவன் வருங் காலொலி அவள் செவியில் நுழைகிறது. அச்சமும் நாணமும் ஒருங்கே அடைகிறாள். ஆற்றைக் கடந்து போக



தன் சமீபத்தில் வரும் இளஞ்சிங்கத்தை ஏறிட்டு நோக்குகிறாள். அக்காளையும் அம்மங்கை நல்லாளைக் காண்கிறான். இருவரும் ஒருவருள்ளத்தில் ஒருவர் புகுந்தார்கள். செயல் மறைந்தது. சொல்அற்றது.

3

நல்லூரில் பரபரப்பு வீதியில் கார்கள் பறக்கின்றன. சுந்தரம் பிள்ளையின் வேலைக்காரர்கள் தலை கால் தெரியாமல் அலைகிறார்கள். ‘இங்குங் காணோம், அங்குங் காணோம், எங்குங் காணோம்’ என்ற பேச்சு. ‘சுந்தரம் பிள்ளையின் மகள்’ என்கிறார் ஒருவர். ‘அந்தப் பெண் பரம சாதுவாச்சே. அது கூடவா அப்படி!’ என்கிறார் மற்றொருவர். ‘அந்தப் பெண்ணின் தகப்பன் செய்தது மகா கொடுமை. அந்தப் பெண் செய்தது சரியே’ என்கிறார் ஓர் சீர்திருத்தக்காரர். ‘பெண்ணிற்கேற்ற புருஷனல்ல. அவனு மடிந்தான். இதுவும் இந்த கதியாயிற்று’ என்கிறார் ஓர் பெரியார். ‘இவைகளெல்லாம் தலையெழுத்து, இதை யாரால் மறுக்கமுடியும்?’ என்கிறார் ஓர் வயோதிகர். இப்படி ஊரில் பலர் பலவாறாகப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

சுந்தரம் பிள்ளை வீட்டில் துக்கம் குடிகொண் டிருக்கிறது. ஓர் தனி அறையில் ஒரு சாய்வு நாற்காலியில் சுந்தரம் பிள்ளை சாய்ந்து கிடக்கிறார். அவர் கண்களில் நீர் தாரைதாரையாக வழிகிறது. முகத்தில் அவமானக் குறி—கோபக் குறி—பரிதாபக் குறி மாறிமாறித் தோன்றுகின்றன. தனக்கு வந்த அவமானத்தை அறிகிறார். மகள் தனக்கு செய்த துரோகத்தை எண்ணுகிறார். மகளுக்குத் தான் செய்த கொடுமையை நினைக்கிறார். கைகளைத் தலையில் மோதிக் கதறுகிறார். என் செய்வார் பாவம்! துப்பு ஒன்றும் துலங்கவில்லை. சில வருடங்கள் கழிந்தன.

4

பூம்புகார் பட்டினத்தின் தென்புறம். கோட்டைகள், மாளிகைகள், மண்டபங்கள், இடிந்து கிடக்கும் புறச்சுவர்கள். அவ்விடத்து சுமார் 60 வயதுடைய வாடிய முகத்தவர் ஒருவர் மூர்க்க எண்ணத்தினராய், முணுமுணுத்த வாயராய், கொடிய நோக்குடைய கண்ணராய் மறைந்து மறைந்து திடுக்கிட்ட மனதோடு உலாவுகிறார். அவரது கையில் ஒரு சுழல் துப்பாக்கி இருக்கிறது. அந்தப் பாழடைந்த இடத்தில் இவர் விரும்பி எதிர்நோக்கும் பொருள் யாதோ?

பூம்புகார் பட்டினத்திலிருந்து அப்பாழடைந்த இடத்திற்கு வர ஒரு நேர் பாதை உண்டு. அவ்வழியே ஒரு வாலிபன் அப்பாழிடத்திற்கு வருகிறான். சுமார் 28 வயதும், அழகிய உடலமைப்பு முள்ளவன். அவன் அழிந்த அவ்விடங்களைக் கண்டு அவைகள் அவ்வாறான காரணத்தை எண்ணி எண்ணி இளகிய சிந்தையோடு உட்புறங்களைப் பார்வை யிடுகிறான்.

அதே சமயத்தில் துப்பாக்கியின் சத்தம் கேட்கிறது. அங்கு வந்த ஒப்புயர்வற்ற ஆணழகன் கோவென வீரிட்ட சத்தத்துடன் வீழ்கிறான். அவன் உடம்பிலிருந்து இரத்தம் வெளிப்பட்டு ஓடுகிறது. அதில் புரண்டு கதறும் அவ்வாலிபன் அருகில் பெரியவர் வருகிறார்.

அவரது கண்கள் சிவப்பேறுகின்றன. கீழ் விழுந்த அவ்விளைஞனை நோக்கி இரக்கமற்ற சிந்தையுடன் 'பாதகா! எனது குடும்பத்தைக் கெடுத்தாய். மானத்தை மடித்தாய். எனது பெயரைப் போக்கினாய். ஊரார் என்னை நகைக்கவும் ஏளனம் செய்யவும் செய்துவிட்டாய். எனது உயிர்போல் வளர்த்த என்னருமை மகளைப் பிரித்தாய். இவ்விடம் வந்து மறைந்திருந்து திருட்டு வாழ்க்கை நடத்துகிறாய். என்னைக் கெடுத்த உன்னை எனது வாழ்நாளிலேயே பழிக்குப் பழி வாங்கிவிட்டேன்' என கோபம் பொங்கி எழக் கூறினார்.



அவ்வழகன் 'கண்மணி சௌந்தரம்! நான், நமது வாழ்க்கையிலிருந்து இன்று விடுபடுகிறேன். எனது வாழ்க்கை உனது தந்தையின் கையாலேயே முடிவடைகிறது. எனதன்பே! நீ எவ்வாறு உயிர் தரிப்பாய்? உன்னைப் போன்றே உனக்குத் தோன்றியுள்ள 4 வயது பெண் குழந்தையின் பிற்கால கதி என்ன? ஆ!...........' மூர்ச்சிக்கிறான். பின் தெளிந்து சுந்தரம் பிள்ளையை நோக்கி 'ஐயா! எனது மரண தறுவாயிலாவது தங்களைக் காண நேர்ந்ததற்கு சந்தோஷிக்கிறேன். தாங்கள் இச்சமயம் எனக்கு ஒரு உபகாரம் செய்ய வேண்டும். மருதாபுரம் மிராசுதார் சந்திரசேகரம் பிள்ளைக்கு 'உனது மகன் இளம்பூரணன் இறந்தான்' என்கிற செய்தியை அறிவித்து விடுங்கள்.' அவனது விழி சுழலுகிறது; மூச்சு அடங்குகிறது; முடிவடைந்துவிட்டான். அந்தோ! என்ன கொடிய நிகழ்ச்சி.

அவ்வயோதிகர், துடிதுடிப்போடு 'சந்திரசேகரம் பிள்ளையின் மகனா! அய்யய்யோ! எனது தங்கை மகனை என் கையினாலேயே



மடித்துவிட்டேன். எனது தங்கையிடம் எனக்கேற்பட்ட கொடிய பகையே இது வரையில் இவனை இன்னானென அறியாதிருக்கச் செய்தது. அவர்கள் வாழ்க்கையும் நிர்மூலமாய் விட்டதே!' என்று சொல்லிக்கொண்டே கைத் துப்பாக்கியைத் தன் மார்பை நோக்கிப் பிடித்தார். உடனே அவரும் பிணமாய்க் கீழே சாய்ந்தார். சுற்றுப்புறத்திலிருந்தோர் பெருங்கூட்டங் கூடிவிட்டனர். இளம்பூரணன் இடம் தெரிந்த சிலர் அவன் வீட்டை நோக்கி ஓடுகிறார்கள்.

பூம்புகார் நகரின் அழகிய வீதியில் ஓர் வீடு. அதில் தங்க பிம்பம் போன்ற ஓர் பெண் குழந்தையோடு ஓர் இளமங்கை கொஞ்சிக் குலாவி தன்னைப் பிரிந்து சென்ற கணவனின் வருகையை எதிர் நோக்கி இருக்கிறாள். அவ்வீடு நோக்கி சிலர் ஓடி வருகிறார்கள். கண்ணீர் ததும்ப பெருமூச் செறிகிறார்கள். அவர்களைக் கண்ட அக்காரிகை நடுநடுங்கினாள். 'தன் மணாளன் தனது தந்தையின் கையால் மாண்டான்' என்று வந்தவர்கள் கூற, 'ஹா! என் ஆருயிர் நாதா!' எனக் கதறினாள். ஹிருதயம் பிளந்தது. உயிர் உடலினின்றும் பிரிந்தது.

என்னே கொடுமை! பொருத்தமற்ற திருமணத்தால் மூன்று உயிர்கள் ஒரே சமயத்தில் அகால மரணம் அடைய நேர்ந்தன. சமூக சீர்திருத்தங்கள் ஏற்பட்டு இந்தப் பழிகளும், கொடுமைகளும் ஒழிகின்ற காலம் எப்பொழுதோ?


ஸ்ரீ லலிதா நவரத்தினம்

என்னும்

## மனையடி சாஸ்திரம்

சௌக்கியமாகவும் சம்மதத்துடனும் வாழ விரும்புவோர் வீடு, குளம், கிணறு, தோட்டம் முதலியவைகளை சாஸ்திரப்படி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். தமிழில் எளிய வசன நடையில் எழுதப்பட்டது.

1-ம் பாகம் விலை ரூ 1-0-0 ஷை 2-ம் பாகம் அணா 8.

குளம் கிணறு வெட்ட ஜலாசய நிர்மாண சாஸ்திரம் அணா 8.

விருக்ஷாதி சம்ரக்ஷணை சாஸ்திரம் தீபிகை அணா. 8.

கோசம்ரக்ஷணை சாஸ்திரம் விலை ரூபா. 1.

ஐந்து புஸ்தகம் சேர்த்து வாங்குபவர்களுக்கு தபால் சார்ஜ் உள்பட விலை. ரூ 3—8—0

ஆர். கோபாலய்யர்,
புலிவலம், விஜயபுரம் போஸ்ட்
தஞ்சாவூர் ஜில்லா.

# CIVILISATION: ANCIENT AND MODERN

# நாகரிகம்: பழையனவும், புதியனவும்

[M. மகாலிங்க முதலியார், கோட்டாறு.]

நாகரிகத்தைப் பற்றிப் பேசாத நாடும் இக்காசினியிலுண்டோ? மானிட உருத்தாங்கிய மக்களனைவரும் நாகரிகத்தில் முதிர்ச்சியடையவே முயலுகிறார்கள். ஒரு தேசத்தினர் மற்றொரு தேசத்தினரது நாகரிகத்தைப் பழித்துக் கூறுகின்றனர். கீழ்நாட்டவர் மேல்நாட்டினர் நாகரிகத்தை நிந்திக்கின்றனர்; மேல்நாட்டார் கீழ்நாட்டு நாகரிகத்தில் வெறுப்புறுகின்றனர். ஆகவே எந்த நாகரிகத்தைப் பின்பற்றுவது, எதைப் புறக்கணிப்பது, எத்தகையனவற்றை யாதரிப்பதென வறிஞர் பலர் ஆராய்ச்சியி லுழன்று வருகின்றனர்.

மக்கள் முதன் முதலாக மாக்கள்போல் வாழ்ந்து வந்தனர். மனிதன் தனக்கறிவுண்டென்ப தறியாது வாழலுற்றான். நாளேற நாளேற, தன்னெதிரில் சில பொருள்கள் தோன்றுவதையும், அவைகள் அழிவதையுங் கண்டான். அக்காட்சியால் ஆராய்ச்சி பிறந்தது. அவ்வாராய்ச்சியா லான்ற அறிவு மிளிர்ந்தது. பின்னர் தன்னைப்போல பிறரை நேசித்து வாழும் தன்மையைப் பெற்றான். நாகரிகமடைந்தான். ஆகவே தன்னைப்போல் பிறரை நேசித்து வாழும் சகோதரத் தன்மையை நாகரிகமெனக் கூறலாம். நாகரிகத்திற்குப் பலர் பலவாறு பொருள் கூறுகிற்கின்றனர். தொன்மையதாம் நம் நாகரிகத்தைத் திரிந்து நோக்குவமேல்,

"இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்துவிடல்"

என்ற இது போன்ற திருவாக்குகளை சிரமேற்கொண் டொழுகி வந்ததாய்த் தென்படுகிறது. இதைத்தான் தற்பொழுது மகாத்மா காந்தி போன்ற பெரியார்கள் புதுப்பிக்க பகீரத பிரயத்தனமெடுத்து வருகிறார்கள். இத்தகைய கொள்கையையே இவர்கள் நாகரிகமெனக் கொள்ளுகின்றனர். இதுவே அவர்களுக்கு வாழ்க்கையில் வெற்றியைக் கொடுக்கின்றது. வாழ்வைத் தூய்மைப்படுத்துகின்றது. மேல் நாட்டவரும் இதனையே பின்பற்ற முன் வந்துள்ளனர். சில வாண்டுகளுக்கு முன் ஐரோப்பாக் கண்டத்தினர் செல்வப்பொருளையே பொருளாகக்கொண்டு அதைப் பெறவேண்டிய வழிகளிலே ஒருவரோடொருவர் சண்டையிட்டு, ஒருவரை யொருவர் வெட்டிச் சாய்த்துச் சகோதர தருமம் யாதுமின்றி வாழ்ந்து வந்தனர். இத்தகைய வத்தேயத்தில் சகோதர தருமத்தை நிலைநாட்டவே கடந்த மாபெரும் யுத்தத்தை நடத்த ஆண்டவன் அருள்புரிந்தானென தற்பொழுது சிந்தித்துக் தெளியவேண்டியிருக்கின்றது. யுத்தத்தினிறுதியில் யாதுற்றது? ஜெர்மனி நடுங்கிற்று; ஒடுங்கிற்று. இருதரப்பினரும் பொறுமை யுற்றனர்; சமாதானங் கொண்டனர். இவ்வித சமாதானத்திற் கிடங்கொடுக்காதிருந்தால் ஜெர்மனி யடியோடு வன்றே வீழ்ந்திருக்கு மென்பதி லையமில்லை. இந்த யுத்தத்தின் பிறகுதான் 1919-ல் அமெரிக்கன் பிரஸிடெண்ட் வில்ஸன் என்பாரால் உலக சமாதானத்தை யுன்னி, ஐக்கிய சங்கம் (League of Nations) ஒன்று ஜெனிவாவில் நிறுவப்பெற்றது. இங்கிலீஷ் அரசியல் வாதியான லார்ட் ராபர்ட் ஸெஸில் (Lord Robert Cecil) என்பாரிதற்குப் பெரிது முழைத்து வெற்றிபெற்றது போற்றத்தக்கது. இந்த ஐக்கிய சங்கத்தின் முக்கிய கொள்கை உலக சமாதானமேயாகும். சண்டை செய்ய வேண்டுமென்னு மெண்ணத்தோடு எந்நாட்டினரும், எக்கருவிகளையுஞ் செய்யலாகாது என்பது இச்சங்கத்தின் விதி. ஆனால் அமெரிக்கா நாகரீகமானது அத்தேயத்தினரை யுத்தக்கருவிகள் புதிது புதிதாகக் கண்டு பிடிப்பதிலேயே ஈடுபடச் செய்கின்றது. ஆகையினால் தனது ஐக்கிய சங்கத்தில் அது சேராதொழிந்தது போலும். மேல்நாட்டு நாகரிகம் இவ்வாறிருப்ப நமது பண்டைய நாகரிகத்தைச் சிறிது கவனிப்போம்.

ஷாஜஹானென்னும் முகம்மதிய மன்னன் அரசு செலுத்திய நாட்களை நம் நினைவிற்கிழுப்போம். அந்நாளிலுள்ள சிற்ப வேலைகளின் பெருமை இந்நாளிலும் பெரிதும் பாராட்டப்படுகின்றது. நாம் கனவிலு மெண்ணுதற்கரிய வற்புதத்தை அத் தாஜ்மஹால் காட்டுகின்றது. இது உலக அற்புதங்கள் எழிலொன்றாக மதிக்கப் படுகின்றது. தொன்மை நாளில் கோமான்கள் கட்டுவித்த கோவில்களிலுள்ள அற்புதச் சிற்பவேலைகள்தா னென்னே! இவைகள் பண்டை நாகரிகச் சிறப்புகளை விளக்கவில்லையா? மஸ்லீன்கள் நெய்வதற்கு நூற்ற கைகள்தா னெங்கே? அசோகன் காலத்தில் அரசியல் எந்நிலையுற்றிருந்தது? பஞ்சாயத்து நீதி எவ்வித பதவி யடைந்திருந்தது? இதையன்றோ நம் காந்தியடிகளும் அரசியலின் நாகரிக முறையென்று செப்புகின்றார். நம் பொய்யிற் புலவர் அரசியலைப்பற்றி யாது கூறிப்போந்தார்? இவற்றைச் சிந்திக்குங்கால் நாம் பண்டே பாங்குற்ற நாகரிக மோங்கப்பெற் றிருந்தோமென்பது வெள்ளிடைமலையாகின்றது.

மக்கள் வயற்புறங்களில் குடிசைகளமைத்து, சூரிய வெளிச்சமும், சுத்தக்காற்றும் நிரம்பப்பருகி தேகாரோக்கியத்துடன் வாழ்ந்து வந்தனர். இயற்கை வாழ்வு இவர்களுக்கு எல்லா வளமும் ஈந்தது. இவ்வியற்கையோடிருந்து பயின்ற பண்டைக்காலத்துக் கல்வி முறையும் போற்றத் தக்கதாகவே இருந்தது. கவியரசர் ரவீந்தரநாத் தாகூர் (Rabindranath Tagore) பண்டைக்கல்வி முறையே பின்பற்றத் தக்கதென வாய்ப்பறை சாற்றி, அதனைத் தாமும் செய்கையிற் காட்டி வருகின்றாரென்றால் அதைப்பற்றி பெருமைபடக் கூறுவது மிகையேயாகும். அக்காலத்தில் ஒழுக்கம் எந்நிலையுற்றிருந்தது? பெண்டிர், கற்பைத் தங்க ளணிகலனாகக் கொண்டிருந்தனர். தற்

பொழுது அமெரிக்காவில் மணமாகாத மாணவிகள் அநேகர் மக்களை ஈன்றிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இதற்குக் காரணமென்ன? தற்கால நாகரிகம் முதிர்ச்சி யடைந்து பழுத்து அழுகிவிட்டதென்றே கூறவேண்டி யிருக்கின்றது. பெண்டி ரக்காலத்திலடிமைகளாய் நடத்தப்பட்டார்களா, அன்றி சுதந்திரங் கொடுக்கப் பெற்றார்களா வென்று சிந்தித்தால் சுதந்திரந்தான் கொடுக்கப்பட்டார்களென ஒருவாறு கூறலாம். அடிமைக்கால மிடைக்காலமென்றே கூறவேண்டும். இதைப்பற்றி ஈண்டு விரிவாக சிந்திப்பது பொருத்தமன்று. ஆகவே பண்டை நாகரிகம் பெரும்பாலும் உயர்ந்ததென்றே கூறலாம்.

இனி தற்கால நாகரிகத்தைப்பற்றி சிறிதளவு கவனிப்போம்.

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

எனத்தமிழ் வள்ளலொருவர் கூறிப்போந்தார். காலச் சக்கரஞ் சுழலுந்தோறும் நாகரிகமும் சுழலுமென்ப தியல்பு. பண்டைக்காலத்தில் நாகரிகம் முதிர்ந்திருந்ததாயினும் அத்துடன் மூடநம்பிக்கைகளும் குடிகொண் டிருந்தன. அதனாலேயே அந்நாகரிகம் இன்று பெரிதும் கைவிடப்படுகிறது. நாம் இன்று வாழ்வது காரண உலகு (An age of' Reason) ஈண்டு மூடநம்பிக்கைக்கு இடஞ் சிறிதளவேனுங் கிடையாது. இதுவோ, சந்திரலோகத்தை யடைந்து ஆண்டுள்ள அதிசயங்களைக் காண்பதற் கவாக்கொண்டுள்ள காலம். காரணமின்றி மக்க ளெதனையும் நம்பார். எனவே, மூடநம்பிக்கைகள் கலந்த பண்டைய நாகரிகத்தினை மக்கள் விரும்பாது புது நாகரிகம் மேற்கொள்ளத் தொடங்கினர். ஆனால், புதிய நாகரிகம் மக்கள் இயற்கை வாழ்வு நடாத்துவதை அடியோடு புறக்கணித்துவிட்டது. எல்லைப்புறங்கள் தொலைந்து, நகரங்கள் தலைகாட்டின வண்ணமாகவே யிருக்கின்றன. இந்நகரங்களில் இயற்கை வாழ்விற்குச் சிறிதேனும் இடமில்லை. செயற்கை அழகும், செயற்கை இன்பமுமே நகரங்களில் மலிந்துள்ளன. அதனால் சகோதர தர்மம் குன்றுகிறது. மனிதன் வாழ்விற்கு அவசியமில்லாத அநேக பொருள்கள் தேவைப்படுகின்றன. செயலிலும், பாவனையிலும், நடையிலும், உடையிலும் டம்ப வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதிலேயே இப்புதிய நாகரிக மாழ்ந்து கிடக்கின்றது. தேவை மிகுந்ததால் நல்குரவு மிகுந்தது. ஏழைக ளெண்ணிறந்தவராயினர். ஆனால், இவ்வேழைகளுக்கும் நாரில் மணம் பூவினாலென்றாற்போல சிற்சில வசதிகளுங் கிடைக்கின்றன. மோட்டார்களென்ன, தந்திகளென்ன, ரயில்களென்ன, இவைகள் போன்ற வசதிகளை பணமுள்ளவன் ஆசைப்படுகின்றான்; அதனால் ஏழைகளும் வசதியுறுகிறார்கள். நாளுக்கு நாள் தேவைக்குத் தக்கவாறு மக்கள் புதிய புதிய வசதிகளைக் கண்டுபிடித்தே வருகின்றனர். காந்தி இர்வின் சமரசப்பேச்சில் லார்ட் இர்வின் ஆராயிர மயிலுக்கப்பாலிருக்கும் முதல் மந்திரியோடு நிமிடத்திற்கு நிமிடங் கலந்



தாலோசித்தா ரென்றால் இக் காலநிலையினை என்னென்று கூறுவது?

புதிய நாகரிகத்தில் மக்கள் ஒருவர்க்கொருவர் அடிமையாகிவிட்டனர். எனவே, சுதந்திரத்தை நாடி, யாவரும் உழைக்கவேண்டிய நிர்ப்பந்தம் இன்று ஏற்பட்டுள்ளது. மக்கள் யாண்டு பார்த்தாலும், சமஉரிமை பெற்று, சமநிலையோடு, மனிதர்க்கு மனிதர் யாதொரு வேற்றுமையு மில்லாது வாழ ஆசைப்படுகின்றனர். மனிதரென்ற தோரணையில் யாவரும் சரி நிகர் சமானமாக விருக்க எண்ணுகின்றனர். தொழிற்சாலைகளில் முதலாளித் தத்துவத்தை அடியோடு வேரறுக்கப் பெருமுயற்சி யெடுத்துவருகின்றனர். இதிற் பெரிது முழன்று வந்தவர் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்த ஜெர்மனியர் கார்ல் மார்க்ஸ் (Karl Marx) என்பார். இவரது திட்டப்படி இவரடியார்கள் உழைத்ததின் பயனாகவே ருஷ்யாவில் 'பால்ஷ்விஸம்' (Bolshevism) தலைகாட்டிற்று.

தற்கால நாகரிக வாழ்க்கையின் பயனாக மக்களுக்கு இயற்கை வாழ்வு குன்றுவதால் நோய்க ளதிகப்படுகின்றன. புதிய புதிய நோய்கள் உற்பத்தியாகிக் கொண்டே யிருக்கின்றன. பண்டை மக்கள் இவ்வாறு நோய்களைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இயற்கைக்கு விரோதமாக வாழ்வு நடாத்த எண்ணுவதால் மக்கள் செல்வத்தி னருமை தெரியாதவர்க ளாகிவிடுகின்றனர். அரை நொடிப்பொழுதி லாயிரமுஞ் செலவழிக்கத் தயாராயிருக்கிறார்கள். இதுவும் நாகரிகமோ? எத்துணை மக்கள் குதிரைப் பந்தயங்களில் பணங்களை வாரி இறைத்து யிறுதியில் ஏமாப்புற்று வருகின்றார்கள்? எத்தனை பேர் சாராயக்குடியை நாகரிகமென் றெண்ணி யிருக்கின்றனர்? எத்தனை பேர்வழிகள் டம்ப வாழ்க்கையி லுழன்று, வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து இறுதியில் கஞ்சிக்குக்கூட வழியில்லாது அலைகின்றனர்? இவைகளை இவர்கள் நாகரிகமென் றெண்ணினர் போலும். நன்மைக் கேதுவான காரியங்களில் மக்கள் பொருளைச் செலவழிக்க அஞ்சுகின்றார்கள். பெருநோக்குடையவர்கள் வெகு சிலரே காணப்படுகின்றார்கள். இஃது நாகரிகமன்று.

மனிதன் தனக்கு வேண்டுவனவற்றைத் தானே செய்துகொள்ளல்வேண்டும். இதுவே நாகரிகத்தின் முக்கிய பொருள். இயந்திரங்களின் உதவியை நாடுதல் கூடவே கூடாதென்பது மகான்களினான்ற மொழிகளாய் விளங்குகின்றன. அவை, பல பாகங்களின் பொருளை யொருங்கே ஒரு பாகத்திற் குவியச் செய்கின்றன. அதனால் பாழ்பட்ட வேற்றுமைகள் கிளம்புகின்றன. இயந்திர சக்தியின் துணையை நாடுகின்ற தேயத்தில் சகோதரத் தன்மை பரவலருமையினு மருமை. ஆண்டு உண்மை நாகரிகமற்றே யிருக்கும். டால்ஸ்டாய், காந்தியாகிய பெரியார்களைப் போன்று மக்கள் வாழ்க்கை நடாத்துவார்களே யானால் அவ்வாழ்க்கையைத் தான் நாகரிக வாழ்க்கையெனத் துணிந்துகூற இடமுண்டு. அவ் வாழ்க்கையே இன்று வேண்டப்படும் வாழ்க்கையுமாகும். ஒவ்வொருவரும் அதனைப் பின்பற்ற முனைவோமாக.

# முன்னேற்றமா? பின்னேற்றமா?

[T. வேலுப் பிள்ளை, கொழும்பு]

இதுகாறும் உலகம் அடைந்துள்ள முன்னேற்றத்தையும், இன்னும் நாளுக்குநாள் அடைந்துவரும் முன்னேற்றங்களையும் பத்திரிகைகளில் வாசித்தும் கேட்டும் வருகிறோம். அவைகள் ஒவ்வொருவருக்கும் வியப்பையும், ஆச்சரியத்தையும், சந்தோஷத்தையும் தருகின்றனவென்பதில் ஐயமில்லை. கல்வி, நாகரிகம், சாஸ்திர சம்பந்தமான இயந்திரங்கள் கண்டுபிடித்தல் ஆகிய இவ்வழிகளில் முன்னேற்றமடைந்துவரும் பூமி, அநாகரிகம் முதலிய மற்றும் சில வழிகளில் பின்னேற்றமடைந்து வருவதை நோக்குபவர்கள் மிகவும் சிலரேயாவர். இந்தப் பின்னேற்ற விஷயங்களில் சமய வீழ்ச்சியே பிரதானமாகக் கொள்ளத் தக்கது.

சமயமே உலகத்தின் முன்முதற் பொருள். அதுவே உலக நிலையின் மூலாதாரம். இச்சமய வீழ்ச்சியின் காரணமாக உலகம் நாளுக்குநாள் தீய மாறுதல்களை யடைந்து வருகிறது. நாகரிக, இயந்திர முன்னேற்றங்கள் உண்மையில் பெருமிதமான கெடுதிகளையும், அற்ப நன்மையினையும் விளைவிக்கின்றனவென்று உறுதியாய்க் கூறலாம். இயந்திர மிகுதியால் மனிதனுக்கு வேலையில்லாமையும், நாகரிகத்தால் பணச்செலவும் ஏற்பட்டு சகிக்க முடியாத பெருந்துன்பம் விளைந்து வருகிறது. தற்காலக் கல்வியின் முன்னேற்றமும் உண்மையில் ஆராயுமிடத்து கெடுதிகள் விளைப்பனவாகவே இருக்கின்றன. தற்காலக் கல்வி சமய விஷயங்களை முழுதாக நீக்கி, மேற்கூறிய கெடுதிகளை விளைவிக்கும் முன்னேற்றங்களையே மாணவர்களுக்கு ஊட்டி வருகின்றது. முன்னேற்றமெனக் கூறப்படும் இவைகள் மேலைத் தேசங்களிலே உதித்து இப்பொழுது நமது நாடுகளில் உலாவத் தொடங்கிவிட்டன. மேலைத் தேசத்தவரிற் பெரும்பான்மையோர் கடவுள் இல்லையெனவும வாதித்துவிட்டார்கள். ஜெர்மனி, ருஷியா முதலிய தேசங்களில் தெய்வமற்ற சமயமே நிலைத்திருக்கின்றது. கீழ் நாடுகளிலும் இக்கொள்கை சிறுகச்சிறுகப் புகுந்துவிட்டது. தென்னிந்தியாவில் இதன் பொருட்டு அநேக சங்கங்கள் நிறுவப்பெற்று பிரசாரமும் நடத்தப்பட்டு வருகின்றது. முக்கியமாக "தற்கால நாகரிக" மற்றவர்களும், "தற்கால நாகரிகக் கல்வி" யற்றவர்களுமே சமயத்தை ஒருவாறு ஆதரித்து வருகிறார்கள்.

மானிடர் பெரும்பாலும் தீயவழியையே சுலபமாகக் கொள்ளும் தன்மையை உடையவர்களாதலால் நாஸ்திகமாகிய (Atheism) இக் கடவுளில்லாச் சமயம் சிலகாலத்திற்குள் ஜெயமடையுமென்று உறுதியாய்க் கூற இடமுண்டு. தற்காலம் உலகம் பின்பற்றும் தீய வழியி



னின்றும் விலகி நடக்கா தொழிந்தால் சமயம் சீக்கிரத்தில் மறைந்து விடும். இப்போதே சிலர், கடவுளொருவரில்லை யென்றும்; எஞ்சியவர்களிற் பெரும்பான்மையோர் கடவுளுண்டென்று நம்பியும் அவரைப் பின்பற்றாமலும் இருந்து வருகின்றனர்.

மனிதர் சமய விஷயமாக எழுதியுள்ள புஸ்தகங்களையாவது, பிரசங்கங்களையாவது அசட்டை செய்து விடுகின்றனர். அப்புஸ்தகங்களை அல்லது போதனைகளைக் கவனிக்கும் சிலர், அவற்றினை நல்ல முறையில் கொள்ளத் தவறிவிடுகின்றனர். புஸ்தகங்களிலுள்ள பிழைகளிலும், பிரசங்கத்திலுள்ள பிழைகளிலுமே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றார்கள். இவர்களைத் தவிர்த்த மற்றவர்கள் இவ்விஷயங்களைத் தீயவழியில் உபயோகிக்கின்றார்கள். ஒருவனுடைய நோக்கத்தையும், அபிப்பிராயத்தையும் எவ்வளவு சிரமப்பட்டு உலகில் விடுத்தபோதும் அவைகள் பெரு வழக்கில் பயனற்றவை யாய்விடுகின்றன. சைவசமய ஆகமங்களையும், சமய விஷயத்தையும் முழுதாக அறிந்தவர்கள் பார்ப்பனர்கள் எனக் கூறப்படுகிறது. ஆனால் அவர்களோ இந்த விஷயத்தில் சிறிதும் கவலை இல்லாதவர்களாகவும், பெயரளவில் சமயத்தைப் பின்பற்றுபவர்களாக வெளிக்குக் காட்டிக்கொண்டு உண்மையில் பெரும்பாலோர் சமயத்திற்குப் புறம்பான செய்கைகளை மேற்கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

தீண்டாமை ஒழியக்கூடாதெனவும், ஆகமங்களே சரியெனவும் இவர்கள் கூறிக்கொண்டு சமய வளர்ச்சிக்கே பெரிய முட்டுக்கட்டை வழங்குகிறார்கள். கிருஸ்தவ சமயத்தைப் போலவே ஆலயங்களில் சமயப் பிரசங்கங்கள் அவ்வப்போது நடத்துவதால் அதிக நன்மைகள் ஏற்படுமென்பது நமது அபிப்பிராயம். தற்போது நிகழும் ஆலய முறைகளில் காலத்திற்குச் சற்றும் ஒவ்வாதனவற்றை நீக்கி காலத்திற்குத் தகுந்தபடி முன்னேற்றமடையச் செய்யவேண்டியது அறிஞர்களது முதற் கடமையாகும். சமய எழுச்சி உலகத்தில் தோன்றுவதால் கணக்கற்ற தீமைகளும் மறைந்து, சமாதானமும், நன்மையும், செழுப்பும் அவ்விடங்களை நிரப்பும்.

தற்போது தோன்றியுள்ள வேலையில்லாக் கஷ்டம் அனேகருடைய மனதைக் கலங்கச் செய்கிறது. இக்கஷ்டத்தினின்று வெளியேறுவதற்கு முதலில் யந்திர உபயோகத்தை மிகுதியும் குறைத்து நவநாகரிக வாழ்க்கையை அடியோடு கைவிடவேண்டியது மிக அவசியமாகும். நமது நாட்டுக் கைத்தொழிலை ஒவ்வொருவரும் நன்கு ஆதரிப்பதென உறுதி பூண்டு நிற்பார்களானால் வேலையில்லாக் கஷ்டம் வெகுவிரைவில் பறந்துபோகும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

எனவே, நமது நாடு செழிப்புற வேண்டுமென அவாவும் ஒவ்வொரு இந்தியனும், மேலைத் தேசத்தார் பின்பற்றும் பொருத்தமற்ற நாகரிகங்களைப் பின்பற்றாது எளிய தூய்மையான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுவதும்; நமது நாட்டுக் கைத்தொழில்களுக்கு முழு ஆதரவு தரவேண்டுவதும், உண்மைச் சமய நெறி பரவ முயற்சிக்க வேண்டுவதும் இன்றியமையாக் கடமையாகும்.

# செங்குந்த யாத்திரைவாசி

(சென்ற இதழ், 666-ம் பக்கத் தொடர்ச்சி)

எனதன்பார்ந்த சகோதரர்களே! இவ் வாச்சரியமான செய்தியைக் கேட்டு யார்தான் சந்தோஷமடையார்கள்? ஒரே தெருவில் நாலைந்து வீடுகள் இடைவிட்டு இரண்டு கூத்து என்றால் இதைவிட பெருங்கூத்து வேறேயுமுண்டோ? ஒருபக்கம் சிறுத்தொண்டர் நாடகம்; மற்றொருபக்கம் இரண்ய விலாசம். போகட்டும், ஜனங்கள் ஒரேயிடத்திலிருந்து இரண்டு கூத்தையும் பார்க்கும்படியாவது ஏற்பாடு செய்தார்களா? ஒரு வழிப்பட்டவர்களாயிருந்தாலல்லவோ அப்படிச் செய்வார்கள். வடக்கு தெற்காகயிருக்கும் அத்தெருவில் இரண்டு நாடகமேடைகளும் ஒன்றின் பின்புறத்தை மற்றொன்று நோக்கும்படி ஒன்று வடக்குமுகமாகவும் மற்றொன்று தெற்குமுகமாகவும் அமைக்கப்பட்டிருந்தன. ஆகவே ஒரு கூத்தைப் பார்க்க வந்தவர்களுக்கு மற்றொரு கூத்து தெரியவில்லை. இரண்டு கூத்தையும் பார்க்க விரும்பியவர்கள் இங்கு மங்குமாக ஊசலாடிக்கொண்டிருந்தார்கள். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டந்தான். ஆனால் இங்கு பார்க்க வந்தவர்களுக்குத் திண்டாட்டம் உண்டாய்விட்டது.

இதைக் கண்டபிறகு ஊர் இரண்டுபட்டிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? என் வழக்கப்படி விசாரிக்க ஆரம்பித்தேன். உண்மை உணர்ந்தேன். அது கீழ்க்கண்டவாறு:—

மண்ணகரில் ஒரு புளியந்தோப்பு உண்டு. அத்தோப்பிலுள்ள மரங்கள் அவ்வூர்க் கோயிலைச் சேர்ந்தவை. அடிநிலம் மாத்திரம் புறம்போக்கு. ஒருநாள் ஊர்க்கூட்டம் கூடி அடிநிலத்தைக் கோயில்பேரில் தர்காஸ்து செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அரசாங்கத்தார்க்கு மனுச்செய்துகொள்ள வேண்டுமென்று ஊரார் முடிவு கட்டினார்கள். இவ்வேற்பாடு கிராமத்திலுள்ள செங்குந்தர்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதற்குமேல் பெரிய தனக்காரரும் இதை ஒத்துக்கொண்டார் என்று சொல்லவும் வேண்டுமோ? அவரும் உடன் இருந்துதான் இத்தீர்மானத்தைச் செய்தார். கூட்டம் கலைந்ததோ இல்லையோ, பெரியதனக்காரர் வீட்டிற்குவந்து அதே நிலத்தைத் தான் ஸ்வாதீனம் செய்துகொள்ள விரும்பி ஒரு தர்காஸ்துமனு தயார்செய்து, உடனே அனுப்பிவிட்டுத் தன் எண்ணத்தைப் பூர்த்திசெய்வதற்கான முயற்சியும் செய்தார். கிராமத்தார் இதையறிந்து கேட்டபோது சுயநலத்தையே பெரிதாக எண்ணிய பெரியதனக்காரர் ஊரை நிராகரித்துப் பேசினார். உடனே கக்ஷி உண்டாய்விட்டது. அந்த பெரியதனக்காரரோடு இரண்டொருவர் சேர்ந்துகொண்டார்கள். கடைசியாக அடிநில தர்காஸ்து விஷயத்தில் கிராமத்தாரே வெற்றிபெற்றனர் என்றாலும், கக்ஷிமாத்திரம் நிலைத்துவிட்டது.

சிலநாட்கள் போனபின்னர், ஊரார் சிறுத்தொண்டர் நாடகம் வைக்க ஏற்பாடு செய்தார்கள். பிரிந்துபோன பெரியதனக்காரர் அதற்குப் போட்டியாக அதே தெருவில் அதே தேதியில் இரண்ய விலாசம் ஆட ஏற்பாடுசெய்தார். இவ்வளவுதான் நடந்த விஷயம்.

ஐயோ, பாவம். இரண்டுநாள் தள்ளிவைத்திருந்தால் எல்லோரும் கண்டு களிப்படையமாட்டார்களா? ஒரு பகுதியினருக்கு மன ஊசலாட்டத்தையும், மற்றொரு பகுதியினருக்குத் தேக ஊசலாட்டத்தையுமா செய்து வைக்கவேண்டும்? இப்படிப்பட்ட குணக்கேடர்களும் சுயநலப்புலிகளும் ஒழிகிறவரையில் சமூகம் வழிப்படுமா என்றுபாருங்கள். யான் ஒரு தெருத்திண்ணைபார்த்து நிம்மதியாகத் தூங்கினேன். காலை 5 மணி சுமாருக்கு விழித்துக்கொண்டேன். கூத்துகளும் முடிந்தன. கூத்திலிருந்து திரும்பிய அவ்வீட்டுக்கார நல்லண்ணமுதலியார் திண்ணையிலிருந்த என்னை விசாரிக்க ஆரம்பித்தார். அவர் பேச்சிலிருந்து அவர் ஒரு படிப்பாளி என்றும், யாவரிடத்தும் வேடிக்கையாய்ப் பேசும் பழக்கமுடையவரென்றும் தெரிந்துகொண்டு யான், ஒரு வழிப்போக்கன் என்றும் போகிற போக்கில் இன்று இங்கு தங்க நேர்ந்ததென்றும் சொன்னேன். என் ஊர் பேர்களையும், யான் கண்டுவந்த இடங்களையும் கேட்டறிந்துகொண்ட முதலியார், 'சுவாமிகளே? அந்த ஊரில் அண்ணாமலை ரெட்டியாருண்டே, இந்த ஊரில் இராமலிங்கமுதலியாருண்டே, விண்ணகரில் வேதாச்சலம் பிள்ளையுண்டே அவர்களையெல்லாம் அறிவீர்களா? என்னென்ன ஆச்சரியங்கள் கண்டீர்கள்?' என்றார். யான், 'முதலியாரே! அந்த உண்டைகளையெல்லாம் முன்னமே அறிவேன். ஆனால் இந்த ஊருண்டே, இவ்வூர்ச்செங்குந்தர்கள் அறிவுண்டே, இவர்கள் கக்ஷி அதிசயமுண்டே இந்த உண்டைகளைத்தான் இதுவரையில் காணாது இப்போது கண்டேன்.' (தொடரும்)


## வஸந்த விகடன்

(ஓர் உயர்தர ஹாஸ்ய மாதப் பத்திரிகை)

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கட்டுரைகள், கதைகள், படங்கள் அடங்கியதோர் மாதப் பத்திரிகை. சந்தா ரூ. 1. தனிப்பிரதி அணா 1½. ஒவ்வொரு ஆங்கிலமீ 20-ந் தேதி வெளிவரும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்குத் திறமை வாய்ந்த ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைக்கு உடனே எழுதுக.

மானேஜர், 'வஸந்த விகடன்' ஆபீஸ், மதுரை.

# இலங்கையில் செங்குந்தர்கள் எப்போது குடியேறினர்?

[மா. அ. கனகசபை முதலியார், சென்னை.]

(சென்ற இதழ் 657-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரையில் கூறியவற்றால் மானவம்மன் இலங்கைக்கு வேந்தனாகவேண்டுமென விரும்பி இருமுறை காஞ்சீபுரம் வந்து, நரசிம்மவர்மனையடுத்து, பெருஞ்சேனைகள் பெற்றுத் தன்னோடுசென்று போர் புரிந்து அரசனானன் என்பதை அறிந்துகொண்டோம். இனி மானவம்மன் எக்காலத்தவன் என்பதைப்பற்றி ஆராய்வோம். மானவம்மனுக்கு உதவிபுரிந்த மஹாமள்ளன் என்னும் முதலாம் நரசிம்மவர்மன் பல்லவராஜ்ஜியத்தை மிகவும் உன்னத நிலைக்குக் கொண்டு வந்தான். காஞ்சீபுரத்தின்மீது படையெடுத்து வந்த சாளுக்கியரைப் போரில் முறியடித் தோட்டியதோடு நில்லாது, பழிக்குப் பழி வாங்கக் கருதி அன்னோர் தலைநகராகிய வாதாபி நகரத்தின்மீது ஒரு மா பெருஞ் சேனையை அனுப்பினான். அச்சேனைக்குத் தலைவராகச் சென்ற பரஞ்சோதியாராகிய சிறுத்தொண்டநாயனார் வாதாபி நகரத்தைக் கைப்பற்றிக் கொள்ளையாடி அளவிறந்த திரவியத்தோடு காஞ்சிபுரத்திற்குத் திரும்பினார். இவ்வுண்மையினை

'மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத் துனைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்

என்னும் பெரியபுராணச் செய்யுள் வலியுறுத்துகின்றது. மற்றும் சிறுத்தொண்டநாயனாரை அப்பர் சுவாமிகளும் திருஞான சம்பந்த சுவாமிகளும் சந்தித்ததாகப் பெரியபுராணம் கூறுகின்றது. எனவே மேற்கூறிய சிறுத்தொண்டராதியோர் இந்நரசிம்மவர்மன் காலத்தவரென்று பெறப்படுகின்றது. இவர்கள் ஏழாம் நூற்றாண்டி லிருந்தவர்கள் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். கி. பி. 642 ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்திற்கு வந்து அங்கு நெடுநாள் தங்கியிருந்த சீனதேசத்துப் பௌத்த பெரியாராகிய ஹியூன்ஸ்தாங் என்பவர் காஞ்சிபுரத்தையும் மகாமல்லர் நரசிம்மவர்மனையும் பற்றிக் கூறியுள்ளார். திருஞான சம்பந்தசுவாமிகள் நின்றசீர் நெடுமாறனாகிய கூன்பாண்டியனைச் சைவனாக்கியது, பௌத்தரை வாதில் வென்றது, ஆயிரக்கணக்கான சமணருஷிகள் கழுவேறியது போன்ற சம்பவங்களால் சீர்காழி யந்தணர் காலத்தில் சமணமும் பௌத்தமும் நிலைகுலைந்தன என நாம் பெரியபுராண மூலமாக அறியும் உண்மைகளை மேற்கூறிய சீனப்பெரியார் 'பாண்டிநாட்டில் பௌத்த, சமண மடங்களும் கோயில்களும் பாழடைந்திருந்ததோடு அச்சமய நெறிகளைப்



பின்பற்றுவோரும் மிகச் சிலராகவே இருக்கின்றனர்'' எனக்கூறி வலியுறுத்துகின்றனர். இதனால் திருஞான சம்பந்தசுவாமிகள் மதுரைக்குச் சென்று சைவத்தைப் புனருத்தாரணம் செய்த பிறகே சீனப்பெரியார் அந்நாட்டிற்குச் சென்றனர் என நாம் யூகித்தறியவேண்டி யிருக்கிறது. ஆகவே ஆளுடையபிள்ளையார் கி. பி. 642-ஆம் ஆண்டிற்குச் சில ஆண்டுகள் முன்னரே மதுரைக்குச் சென்றிருக்க வேண்டும்.

எனவே சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் மஹா மல்லன் என்னும் முதலாம் நரசிம்ம வர்மன் கி. பி. 630-ஆம், ஆண்டிலிருந்து 660-ஆம் ஆண்டுவரை அரசு புரிந்தான் என்பதை ஒப்புக் கொள்ளவேண்டி யிருக்கிறது. ஒப்புக்கொள்ளவே மானவம்மன் காஞ்சீபுரத்துப் பல்லவசேனையின் உதவிகொண்டு இலங்கை வேந்தனானது சற்றேறக்குறைய கி. பி. 650-ஆம் ஆண்டாகவே இருத்தல் வேண்டுமென அறியக் கிடைக்கிறது.

முசுகுந்தன் காலத்தில் செங்குந்தர்கள் சோழநாட்டில் குடியேறிச் சோழமன்னரது சேனைத்தலைவர்களா யிருந்தார்கள் என்றாலும், பிற்காலத்தில் அதாவது ஆதொண்டசக்கரவர்த்தி காலத்திலோ பல்லவர் ஆட்சிகாலத் தொடக்கத்திலோ அவர்கள் பெரும் தொகையினராய்க் காஞ்சீபுரத்திலும் வந்து குடியேறி பல்லவசேனைகளில் தலைவர்களாகவும் போர்வீரர்களாகவும் இருந்து, சோழநாட்டிலும் தொண்டநாட்டிலும் மிகுந்த செல்வாக்குற் றிருந்தார்கள். அதன் பின்னரே மகாநாடு, திசைநாடுகள், கிளைநாடுகள் ஆகிய பாகுபாடுகள் செய்து நாடு வகுத்திருக்க வேண்டும். செங்குந்தர்கள் அனைவரும் இன்னும் காஞ்சீபுரத்தையே தங்கள் தாய்நாடாகவும், தலைநகராவும் கொண்டிருத்தலால் செங்குந்தர்கள் தொண்டநாட்டில் சேனைத் தலைவர்களா யிருந்தமையாலன்றோ காஞ்சியில் அவர்கள் நிறைந்த செல்வாக்கும் மாவடி சிம்மாசனர் என்னும் பெரும் பெயரும் பிறவும் பெற்றிருந்தார்கள்.

தற்போது இலங்கையிலுள்ள பல செங்குந்த குடும்பத்தவர்கள் ஒரு காலத்தில் காஞ்சீபுரத்துக் குடிகளா யிருந்தவர்கள் என்று காட்டக்கூடிய 'மாவடி' முதலிய தலைப்பெயர்களைக் கொண்டிருப்பதும், அவர்கள் தங்களைக் காஞ்சீபுரத்தார் என்று சொல்லிக் கொள்வதும் நமது ஆராய்ச்சிக்குப் பேருதவி புரிகின்றன. கைக்கோளப் பெரும்படை கடல்கடந்து சென்று ஈழத்தை (இலங்கையை) வென்றனரென்பதை 'சிங்கள மாதிய பல்தேயம் வென்றவர் செங்குந்தரே' என்னும் அடிகளால் நன்கு அறியலாம்

இதனால், செங்குந்தர்கள் பல்லவகுல மஹாமல்லன் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் அதாவது சற்றேறக்குறைய கி. பி. 650-ம் ஆண்டு, காஞ்சீபுரத்திலிருந்து மானவம்மனோடு இலங்கைக்குச்சென்று போர்புரிந்து ஜெயக்கொடி நாட்டிய சேனா வீரர்களாகத்தான் குடியேறி யிருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டி யிருக்கிறது.

# வர்த்தமானம்

## தமிழ்நாட்டு நடப்பு

### விளாப்பாக்கம். "மனோஹரவிலாஸ்" கல்விக்கழக ஆரம்பவிழா.

1-12-34 ல் வடாற்காடு ஜில்லா போர்டு துணைத் தலைவரும், வேலூர் நகரசபை முனிசிபல் சேர்மனுமாகிய திரு. வி. எம். ராமசாமி முதலியார், M. A., B. L., M.L.C., வடாற்காடு ஜில்லா போர்டு மெம்பரும், ஆற்காடு யூனியன் போர்டு தலைவரும் ஆகிய திரு. K. A. E. குப்புசாமிசெட்டியார்; மேற்படி ஜில்லா போர்டு மெம்பரும், திமிரி. நகரசபைத் தலைவருமாகிய திரு. D. K. வரதராஜு ரெட்டியார், ஆற்காடு யூனியன் போர்டு மெம்பர் R. K. லோகநாதமுதலியார் முதலிய தலைவர்களை விளாப்பாக்கம் செங்குந்த சமூகத்தின் சார்பாக, திரு. தி. அ. ராஜகோபால் முதலியார் அவர்கள் தலைமையில் வரவேற்று, கல்விக்கழகக் கட்டடத்திற்கு அழைத்துச் சென்றனர். மேற்படி மனோஹர விலாஸ் கல்விக் கழகத்தைத் திறந்துவைக்கும்படி தலைவர் வி. எம். ராமசாமி முதலியார் அவர்களை ஸ்ரீ ராஜகோபால் முதலியார் கேட்டுக்கொண்டு வெள்ளிச் சாவியை அவரிடம் கொடுத்தார். வேண்டுகோட்கிணங்கி திரு முதலியார் அவர்கள் "நமது ஜில்லாவில் இவ்வளவு உல்லாச

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

இவ்வபிப்பிராயத்திற்கு மாறாக, வேறு எக்காலத்திலாவது வேறு காரணம் பற்றிச் செங்குந்தர்கள் இலங்கையில் குடியேறினர் என்று பொருத்தமான சரித்திர ஆதாரத்தோடு அறிஞர்கள் யாராவது கூற முன் வருவாராயின் அதை வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்; எவ்வகையிலாவது உண்மையைப் பலரும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதே எனது கருத்தாகலின்.

இனி, சேனைவீரர்களாகச் சென்று இலங்கையில் குடியேறிய செங்குந்தர்கள் தமிழ்நாட்டு சகோதரர்களைப் போலவே நெசவுத் தொழிலை மேற்கொண்டிருப்பதன் காரணம் யாதோ வென்று எண்ணலாம். அக்காலத்திலேயே அதாவது 1300 ஆண்டுகளுக்கு முன்னரே செங்குந்தர்கள் போர்த் தொழிலோடு நெசவையும் ஒரு தொழிலாகக் கொண்டிருந்தாலும் இருக்கலாம். அல்லது சோழ, பல்லவ ஆட்சிகள் குன்றிய காலத்தில் தென்னிந்திய செங்குந்தர்கள் மேற்கொண்ட தொழிலையே இலங்கைச் சகோதரர்களும் கொண்டிருக்க வேண்டும். பின்கூறியது உண்மையாயின் இவ்விருநாட்டுச் செங்குந்தர்களுக்கும் நெடுங்காலம் நெருங்கிய சம்பந்தம் இருந்திருக்கவேண்டும்.



மான காற்றோட்டத்துடன் கூடிய சுகாதார இடவசதி கிடையாதென்றும், நமது மக்களை மிக்க உண்மையுடன் பாதுகாக்கக் கல்வியே உயிர்த்துணை" என்றுங் கூறி கட்டடத்தைத் திறந்துவைத்தார். பின்னர், திரு. தி. அ. ராஜகோபால் முதலியார் அவர்களால் தலைவர்களுக்கு முறையே வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்ட பின் தலைவர்கள் முடிவுரை கூறினர். பள்ளிக்கூட மாணவர் மாணவிகட்குத் தின் பண்டங்கள் வழங்கப்பட்டு, திரு. தி. அ. ரா. முதலியாரால் தலைவர் அவர்கட்கும் கூட்டத்தில் வந்திருந்தவர்கட்கும் தன் மனமார்ந்த நன்றி யறிதலுடன் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் முடிந்தது. கூட்டத்தில் சுமார் 600 ஜனங்களுக்கு மேல் கூடியது குறிப்பிடத் தக்கது. இத்தகைய உணர்ச்சி இக்கிராமத்தில் இதுவே முதல் தடவை என்பது மிகையாகாது.

### மல்லசமுத்திரம், சமரச சன்மார்க்க சங்கத்தின் மூன்றாவதாண்டு நிறைவு விழா.

இவ்வூர் சமரச சன்மார்க்க சங்கத்தின் 3 வது ஆண்டு நிறைவு விழா, 17-11-34 சனிக்கிழமை மாலை 2-30 மணிக்கு இவ்வூர் பாவடி ஹாஸ்டலில் காஞ்சீபுரம் சமஸ்கிருத பண்டிட் ம-rா-rா-ஸ்ரீ ஸ்ரீனிவாச சாஸ்திரியார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் ஷை சங்கத்தில் தாரமங்கலத்துக் கடுத்த தோரமங்கலம் தமிழ்பண்டிட் ம-rா-rா-ஸ்ரீ எ. வரதஞ்சயப் பிள்ளை அவர்கள் "மனித வாழ்க்கையின் தத்துவமும், சன்மார்க்கமும்" என்ற விஷயத்தைப் பற்றி உபன்யாசம் செய்தார். அச்சமயம் ஷை சங்கத்திற்குத் திருச்செங்கோடு தாசில்தார் அவர்களும், ஸ்தல ரெவின்யூ இன்ஸ்பெக்டர், சப்ரிஜிஸ்ட்ரார் முதலிய இன்னும் அனேக ஜனங்களும் வந்திருந்தனர். பிறகு சங்கம் 6-30 மணிக்கு கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்று சந்தண தாம்பூல விநியோகாதிகளுடன் கூட்டம் இனிது கலைந்தது.

### மஹாத்மா காந்தி தேசீய வாலிப சங்கத்தின் ஆரம்ப வைபவம்

மேற்கண்ட சங்கம் சிற்சில அசந்தர்ப்பத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டு மறுபடியும் பெரும்பாலான அங்கத்தினர்களின் வேண்டுகோளின்படி துவக்கப்பட்டது.

(சங்கத்தின் மெம்பர்கள்)

தலைவர்: S. கந்தசாமிமுதலியார்; உபதலைவர்: Y. R. ஆறுமுக முதலியார்; காரியதரிசி; S. P. கந்தசாமி முதலியார்; உதவிகாரியதரிசி: M. A. ரத்னமுதலியார்; கணக்காளர்: S. S. அர்த்தனாரி முதலியார்; ஆடிடர்: S. அர்த்தனாரி முதலியார்; பொக்கிஷதார் M. வெங்கடாஜல முதலியார்

### நிர்வாக மெம்பர்கள்

S. K. A. நாகரத்தின முதலியார்; R. V. கந்தசாமி முதலியார்; A. M. கோபாலசாமிமுதலியார்; E. M. ராஜகோபால் முதலியார் M. பச்சையப்ப முதலியார்; A. M. சுப்பிரமண்ய முதலியார் A. அப்பாவு முதலியார்.

2-12-34 மாலை 7 மணிக்கு 1 வது கூட்டம் S. கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. தலைவர் முகவுரையின் பின் M. ராஜகோபால் கடவுள்வாழ்த்து கூற 'சங்கத்தின் அவசியம்' என்பதுபற்றி சேலம் காலேஜ் மாணவர் S. அர்த்தனாரி முதலியார் பேசிய பின்னர், முறையே P.கந்தசாமி, M.சுப்பிரமணியம், உபதலைவர் T.R. ஆறுமுகமுதலியார் பேசுகையில் நாம் யாவரும் கதரை அவசியம் உடுத்தவேண்டுமென்றுகூறினர். பின்னர் தலைவர் முடிவுரை கூற வந்தனோபசாரத்தின் பின் இரவு 9 மணிக்குக்கூட்டம் இனிது கலைந்தது.

---

சென்னை மாகாணத்தில் விவசாயிகளுக்குக் கடன் சுமை எவ்வளவு இருக்கிற தென்பதைக் கண்டறியவும், அதற்குப் பரிகாரம் என்ன செய்யலாம் என்பதைத் தெரிவிக்கவும் சென்னை சர்க்கார் ஸ்ரீ W. R. S. சத்தியநாதன் என்பவரை ஸ்பெஷல் ஆபீசராக நியமித்திருக்கிறார்கள். இந்த ஆபீசர் ஜில்லாக்களுக்கு யாத்திரை செய்து 6-மாத காலத்தில் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

---

நீலகிரி ஜில்லா போர்டுக்கு ஸ்ரீ. H. P. அரி கவுடரும், மதுரை ஜில்லா போர்டுக்கு சேத்தூர் ஜமீன்தாரும் ஏகமனதாகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

---

1935-ம் ஆண்டுக்கு சென்னையின் ஷெரிபாக ஸ்ரீ. ஜே. எம். ஸ்மித் நியமிக்கப்பெற்றிருக்கிறார்.

---

ஈரோடு முனிசிபல் சபையார் டவுனுக்குள் ஆறு இடங்களில் முனிசிபல் இலவச வாசகசாலைகள் ஏற்படுத்துவ தென்றும் தமிழ்நாடு, சுதேசமித்திரன், தினமணி, பகுத்தறிவு ஆகிய தமிழ் பத்திரிகைகள் தருவிப்பதென்றும் முடிவு செய்தனர்.

---

சுயமரியாதை மூன்றாவது மகாநாடு இம்மாதம் கடைசி வாரத்தில், சென்னையில் நடத்தப்படுமாம்.

---

சென்னை சட்ட சபை அங்கத்தினர் ஸ்ரீ சாமி வெங்கடாசலம் செட்டியார் இந்தியா சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றதால் சென்னை சட்டசபை அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார். அந்த ஸ்தானத்திற்கு காங்கிரஸின் சார்பில் ஸ்ரீ மல்லய்யாவும், ஆதி திராவிட சபையின் சார்பில் ஸ்ரீ ஜி. முனிசாமிப் பிள்ளையும் அபேட்சகர்களாக நிற்கிறார்கள்.



இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி சங்க கட்டடத்திற்காக மைசூர் மகாராஜா 10 ஏக்கர் நிலம் வழங்கி இருக்கிறார். அன்றியும் அச்சங்க நடவடிக்கைகளைப் பிரசுரிப்பதற்காக 5-வருஷத்திற்கு வருஷந்தோறும் மூவாயிரம் ரூபா மான்யம் வழங்கப்படும்.

---

தென்னிந்திய நாடகமேடை திலகமான ஸ்ரீமதி எஸ். ஆர். கமலம் சீர்காழியில் 6-12-34 ல் காலமானார்.

---

திருநெல்வேலியில் ஒருஇளம்பெண் மந்திர சக்தியினால் வெள்ளி தாமிர நாணயங்களை தெருவெல்லாம் இறைத்துக்கொண்டு போவதாகத் தெரிகிறது. அந்தச் சிறுமி ஒரு சிகப்பு அங்கி தரித்துக்கொண்டிருக்கிறாளாம். அவள் போகும்போது அவளைச்சுற்றி சிறுவர்கள் சூழ்ந்து செல்கிறார்களாம். அவள் உடன்வரும் சிறுவர்களுக்குத் தின்பண்டங்கள் வாங்கி எறிவதும், தாமிர வெள்ளி நாணயங்களை எறிவதுமாக இருக்கிறாளாம். பஸ் காரர்கள் அவளை எந்த இடத்திற்கும் ஏற்றிக்கொண்டுபோக ஆட்சேபிப்பதில்லையாம்.

---

திருப்பனந்தாள் மடாதிபதிகள் தமிழ் மொழி வளர்ச்சியை நாடி ஆண்டுதோறும் வித்வான் வகுப்பில் முதன்மையாகத் தேறுபவருக்கு 1000-ரூபாய் பரிசளிக்க ஏற்பாடு செய்து சில ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. சென்ற ஆண்டில் இப்பரிசு திரு. T. P. மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களுக்குக் கிடைக்கவேண்டியிருந்தும் ஒரு சில பார்ப்பனரின் தந்திரத்தால் அது ஒரு பார்ப்பனருக்கு அளிக்கப்பட்டதென்பது பலரும் அறிந்ததே. இவ்வாண்டு அப்பரிசு திருப்பூர் முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதராகிய ஸ்ரீ நாராயணசாமி நாயுடுவுக்குக் கிடைத்திருக்கிறது.

---

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 29-வது ஆண்டு விழாவும், சைவர் மகாநாடும் திருவதிகை வீரட்டானத்தில் நவசக்தி ஆசிரியர் ஸ்ரீ கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் இம்மாதம் 23, 24, 25-ந் தேதிகளில் நடைபெறும். அதே சமயத்தில் சைவ மங்கையர் மகாநாடு திருநிறைச் செல்வி தாணு அம்மாள் அவர்கள் தலைமையிலும், சைவ இளைஞர் மகாநாடு சென்னை ஜாயின்ட் சப் ரிஜிஸ்ட்ரார் சீ. இராமலிங்க முதலியார் பி. ஏ. அவர்கள் தலைமையிலும் நடைபெறும். திருக் கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்துச் சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மகா நாட்டைத் திறந்து வைப்பார்கள். அநேக அறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

---

சமீபத்தில் நடைபெற்ற இந்தியா சட்ட சபைத் தேர்தலில் ஜஸ்டிஸ் சட்டசபைக் கட்சியின் பிரதம காரியதரிசியாகிய செட்டிநாட்டுக் குமார ராஜா ஸ்ரீ எம். ஏ. முத்தைய செட்டியார் அவர்கள் ஜஸ்டிஸ் கட்சி அபேட்சகர்களுக்குத் துரோகம் செய்து விட்டாரென

அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் 11-12-34-ந் தேதி ஜஸ்டிஸ் சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில் வெங்கடகிரி குமார ராஜா அவர்களால் கொண்டுவரப்பட்டு, சர். ஏ. பி. பாத்ரோ அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, டாக்டர் சி. நடேச முதலியார் அவர்களால் ஆதரிக்கப்பட்டது. அச்சமயம் குமார ராஜா அவர்கள் தனது நிலைமையை விளக்கி ஒரு அறிக்கையை சமர்ப்பித்துவிட்டு பிரதம காரியதரிசி பதவியையும், ஜஸ்டிஸ் நிர்வாக சபைத் தலைமைப் பதவியையும் ராஜிநாமா செய்து விட்டார்.

## இந்தியச் செய்திகள்

காசி சர்வ கலாசாலைக்கு கோலாப்பூர் மகாராஜா ஒரு லட்ச ரூபாயும், சவந்தவாடி சமஸ்தானாதிபதி பதினாயிரம் ரூபாயும் நன்கொடை யளித்தனர்.

---

ஜார்ஜ் மன்னரது 25-வது ஆண்டு ஆட்சி விழா சம்பந்தமாக அடுத்த மே மாதம் 6-ந் தேதி இந்தியா முழுவதற்கும் அரசாங்க விடுமுறை தினமாகும். அதன்பின் 18-ந் தேதிக்குள் மற்றொரு நாளை மாகாண சர்க்கார்கள் தங்கள் சௌகரியப்படி விடுமுறையாக விடுவார்கள்.

---

வியன்னாவிலிருந்த சுபாஷ் சந்திர போஸ் தனது தந்தையார் ஸ்ரீ ஜானகி நாத போஸ் காலமானதை முன்னிட்டு இந்தியா வந்து சேர்ந்தார். அவரை வீட்டை விட்டு வெளியில் போகக்கூடா தென இந்திய சர்க்கார் தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்கள்.

---

எல்லைப்புற காந்தியான ஸ்ரீ கபூர்கான் சிறையிலிருந்து வெளி வந்து 3-மாதங்களாயின. மீண்டும் அவர் 7-12-34-ல் 124-ஏ. செக்ஷன்படி அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டு இரண்டு வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார். டாக்டர் சத்தியபால் அவர்களும் அதே செக்ஷன்படி கைதி செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

---

எவரெஸ்டு சிகரத்தைக் கண்டு பிடிப்பதற்காக 4-சீன ஆராய்ச்சியாளர்கள் திபேத்துக்குப் புறப்பட்டுள்ளார்கள்.

---

தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் நடத்திய பேச்சுக்களைக் கொண்டு சில காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்படலாமென சிலர் நினைக்கிறார்கள். அவர்களின் பேச்சுக்களை இந்திய சர்க்கார் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

---

மகாத்மா காந்தி எல்லைப்புறம் செல்வதற்கு வைசிராயின் அனுமதி கோரி யிருந்தார். மகாத்மாவின் கோரிக்கையை வைசிராய் நிராகரித்து விட்டதால் மகாத்மா சட்ட மறுப்பை மீண்டும் ஆரம்பிக்கக் கூடுமோ என சில அரசியல் வாதிகள் சந்தேகிக்கிறார்கள்.

## கிளர்ச்சி

### திரான்ஸ்வால் செங்குந்தர் சங்கம்.

நாளது 1934-ம் ஹு அக்டோபர் மீ 7உ ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு, தலைவர் செ. வ. வீரபத்திர முதலியாரவர்கள் கிரஹத்தில் கூடிற்று.

செ. வ. வீரபத்திர முதலியார், சு. பாலசுந்தர முதலியார், அ. சொக்கலிங்க முதலியார், ப. சிங்காரவேல் முதலியார், பிரிட்டோரியா, சீ. கந்தசுவாமி முதலியார், ச. இராமு முதலியார், அ. பாலசுப்பிரமணிய முதலியார், A. செண்டாவொன் முதலியார், ஆ. பொன்னுசுவாமி முதலியார், அ. நாராயணசுவாமி முதலியார், கோ. வீரபத்திர முதலியார், க. முருகைய முதலியார், சி. தெண்டபாணி முதலியார் ஆகியோர் விஜயம் செய்திருந்தனர்,

(1) சபாநாயகர் செ. வ. வீரபத்திர முதலியாரவர்களால் சபையின் திறப்புரை வழங்கப்பட்டது.

(2) காரியதரிசி சு. பாலசுந்தர முதலியாரவர்களால், சென்ற காலத்திய முயற்சியின்பேரில் சங்கம் வேலை செய்ததின் திறனும், இடையில் வாளாவிருக்க நேர்ந்ததின் காரணமும், தற்போது இச்சங்கம் விடா முயற்சியுடன் நடந்து வரவேண்டு மென்பதற்கு வற்புறுத்தலுக்காதாரமாகிய நம்முன்னோர்களின் சரித்திர சுருக்கங்களும், எந்தவித குதர்க்கங்களும் நேராவண்ணத் தக் குரிய வேண்டுகோளும், செங்குந்தமித்திரன் ஆசிரியரவர்கள் எழுதிய லிகிதங்களின் முக்கிய நோக்கக் கருத்துக்கள் முதலியனவும் விரிவுரையாக வழங்கப்பட்டன.

(3) பிரிட்டோரியா பிரதிநிதி ப. சிங்காரவேல் முதலியார் அவர்களால் நங்குல முன்னேற்றத்துக்குப் பாடுபடவேண்டிய முக்கிய அம்சங்கள் பற்றி பலகாரணங்களுடன் வழங்கப்பட்டது.

(4) பொக்கிஷதார் சு. சொக்கலிங்க முதலியார் அவர்களால், சங்கம் மேன்மேலும் உறுதியுடன் நின்று குலத்தெண்டு புரியவேண்டு மென்பதுபற்றிய வுண்மையுரை வழங்கப்பட்டது.

(5) திரு. சீ. கந்தசுவாமி முதலியாரவர்களால், முன்பின் நடந்தவைகளில் குற்றங்காணாது குணத்தைக் கைக்கொள்ள வேண்டப்பட்ட தாழ்மையுரை வழங்கப்பட்டது.

(6) திரு. ஆ பொன்னுசுவாமி முதலியாரவர்களால், மேற்சொன்ன விஷயங்களின் ஆங்கீகாரவுரை வழங்கப்பட்டது.

தீர்மானங்கள்

(1) சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு 1930ஹு மிருந்து 1934ம் ஹுவரை வருஷம் ஐந்துக்குள்ள கிளைச்சங்கக்கட்டணம் ரூபாய் 25 ம் ஷை சங்கத்திற்கு அனுப்பிவிட வேண்டியது.

ப. சி. முதலியார் பிரரேபணை, ஆ. பொ. முதலியார் ஆமோதனை; யாவருடைய அங்கீகாரம்.

(2) மேற்கண்டு ரூபாய் 25 யும் நபர் 1 க்கு ஒரு ஷிலிங் வீதம் வசூலிக்க வேண்டியது. வசூலித்துப் பாக்கிவரும் பணத்தைத் தலைவர் செ. வ. வீரபத்திர முதலியாரவர்களே கொடுத்துப் பூர்த்திசெய்ய வேண்டியது. சு. பா. முதலியார் பிரரேபணை, அ. பாலசுப்பிரமணிய முதலியார் ஆமோதனை, யாவருடைய அங்கீகாரம்.

(3) இனி நபர் 1 க்கு மீ 1 க்கு 2 ஷிலிங் வீதம் சங்கத்துக்குச் சந்தா செலுத்த வேண்டியது.

சு. பா. முதலியார் பிரரேபணை, அ. பா. முதலியார் ஆமோதனை, அனைவரது அங்கீகாரம்.

(4) அ. சொக்கலிங்கமுதலியார் அ. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய இருவரும் சந்தாவசூல் செய்யவேண்டியது. பிரிட்டோரியாவுக்கு, திரு ப. சிங்காரவேல்முதலியாரவர்களை வசூல் கர்த்தராக நியமிக்கப்பட்டது.

இத்துடன் சபாநாயகர் நன்றி யறிதலுள்ள முடிவுரையோடு கடவுள் வணக்கம் செய்தபின், தேனீர் வழங்கி சங்கம் இனிது முடிவாயிற்று.

சு. பாலசுந்தர முதலியார்
கௌரவ-காரியதரிசி.

## ஆறுங்கூர்.

21-10-34. இரவு 7 மணிக்கு, பு. ஆ. பழனியப்ப முதலியார் வீட்டில் கூடிய சிறுகூட்டத்தில். ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் 'சமூக சிக்கனம்' என்பது பற்றி உபந்யசித்தார்

## உன்னியூர்

24-10-34, இரவு, 8. மணிக்கு, அவ்வூர் போர்டு பாடசாலையில், ஆர். மாணிக்க முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிய பெருங் கூட்டத்தில், ச. நா. குமரகுரு முதலியார், "சமூக முன்னேற்றம்" என்பதுபற்றி பேசியபின், தலைவர் தமது முடிவுரையில் செங்குந்தரின் அரிய வீரச்செயல்களை எடுத்துக் காட்டிக் கூறிய முடிவுரைக்குப்பின் காரியதரிசியாரால் வந்தனோபசாரங் கூறக் கூட்டம் முடிந்தது.

## ஆங்கியம்

27-10-34, காலை 10 மணிக்கு. ம-ள-ள-ஸ்ரீ, சி. நமச்சிவாய முதலியார் வீட்டில் கூடிய கூட்டத்தில் சங்கப்பிரசாரகர், 'மாதர் முன்னேற்றம்' என்பதுபற்றிப் பேசி முடித்தனர்.

(17) M. கோதண்டராம முதலியார்,
மின்ரோட், காளபஸ்தி, ரங்கூன்

(18) S. M. சிதம்பர முதலியார்
வி. கே. பிள்ளை அண்டு கோ, பெசவடான் தெரு, புரோம்.

(19) வே. முத்துக்குமாரு முதலியார்,
ஷாப்கீபர், மெங்ராக், பேஹாங்க்

## இரண்டாவது பரிசு பெற்றவர்கள்

ஒரு தப்புள்ள 92 விடைகள் கிடைத்திருக்கின்றன. எனவே இரண்டாவது பரிசு ரூ 75-ம் பங்கிடப்பட்டு ஒவ்வொரு விடைக்கும் ரூ 0-13-0 வீதம் பரிசாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

1—2 பி. ஆர். தணிகாசலம், சென்னை; 3 கே ராஜகோபால், சென்னை; 4-8 என். ஆர். கிருஷ்ணன் & S. G. கதிர்வேல், ஆரணி சைதாப்பேட்டை, 9-13 P. கந்தசாமிமுதலியார், புருகேஸ்பெட்டை 14-17 வெ. ராமசாமிமுதலியார், மேட்டுப்பாளையம்; 18-22 வ. கு. அ. ந. அர்த்தநாரிமுதலியார் பவானி; 23-27 S. தங்கச்சாமிமுதலியார், பரமகுடி; 28-31 S. பாலையா, புளியம்பட்டி; 32 C. K. வீரமுத்து முதலியார், மலைக்கோவில் 33-37 R. சின்னதம்பி பிள்ளை, திருக்கோணமலை; 38-40 V. சோமசுந்திரம்பிள்ளை, ரணவனை எஸ்டேட், சிலோன்; 41-45 M. கோதண்டராம முதலியார், காளபஸ்தி 46-48 S. M. சிதம்பரமுத்லியார், புரோம்; 49-52 Y. தர்மலிங்க முதலியார், ஜெனரல் மர்ச்சண்டு, கொடைக்கானல்; 53-54 க. செ. வீ. ரா. செங்கோட்டையன், பவானி; 55-57 சா. லட்சுமணய்யா கண்டமங்களம் 58 M. வெங்கடாசல முதலியார், முத்துகிருஷ்ணபுரம்; 59 R. மாணிக்கமுதலியார், இரவாங்குடி 60-63 ஆ. பழனியப்பன் முதலியார், மேட்டுப்பாளையம், கொல்லங் கோடு, 64-67 L, முருகேச முதலியார் கதிராமங்களம்; 68-69 கி. சுப்பிரமணிய முதலியார், கருப்பூர், ஆடுதுறை; 70-72 கோ. சிங்காரமுதலியார், கோட்டுப்பாளையம், தரங்கம்பாடி; 73-76 நா. ராமண்ணமுதலியார் ராமாபுரம், நாகப்பட்டணம்; 77-78 முத்தப்ப நயினர், திட்டைக்குடி 79 தொ. செல்லக்குட்டிமுதலியார், சேஷமலை; 80. M. சண்முக சுவாமி, முனிசிபல் ஹைஸ்கூல், கடலூர்; 81-83 ஆறுமுகமுதலி மகன் சென்னியப்பமுதலி, திருப்பூர்; 84-85 இ. குப்புசாமிமுதலியார் காஞ்சிபுரம், 86-88 கோ. மு. அண்ணாமலை முதலியார், காஞ்சிபுரம்; 89-90 திருவேங்கடசாமி (முத்தையாப் பிள்ளை மகன்) திருப்பரங் குன்றம்; 91 அருணாஜல ஐயா, திருச்செங்கோடு; 92. சி. சோமசுந்திரமுதலியார், அம்பாசமுத்திரம்.

## அதிகவிடைகளின் ஸ்பெஷல் பரிசு பெற்றவர்கள்

முதற்பரிசு:—52 விடைகள் அனுப்பிய வெ. ராமசாமி முதலியார் கிடங்கு குமஸ்தா, மேட்டுப்பாளையம் அவர்களுக்கும், இரண்டாவது பரிசு 49 விடைகள் அனுப்பிய C. K. முத்துவீரமுதலியார் மலைக்கோவில் அவர்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.

பரிசுத் தொகைகள் 8-1-35-ல் அனுப்பிவைக்கப்பெறும்.

# அதிக எழுத்துப் போட்டி—முடிவு

சரியான விடைகள்:—(1) வானம் (2) அமலம் (3) தரித்தல் (4) சாம்பல் (5) பாகை (6) கருமகள் (7) மோழல் (8) சீவிதம் (9) தாரணி.

## 19 பேர்களுக்கு முதற் பரிசு

கீழ்க்கண்ட 19 பேர்களும் சரியான விடைகளனுப்பியிருப்பதால் முதற் பரிசுக்குரிய ரூபா 100-ம் பங்கிடப்பட்டு ஒவ்வொருவருக்கும் ரூ 5-4-0 வீதம் பரிசளிக்கப்பட் டிருக்கிறது.

## முதற் பரிசு பெற்றவர்கள்

(1) P. R. தணிகாசலம்,
*வெற்றிலைப்பாக்குக் கடை, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை*

(2) K. ராஜகோபால்,
*டைபிஸ்ட், 2-237, தம்பு செட்டித்தெருவு. சென்னை*

(3) N. R. கிருஷ்ணன் & S. G. கதிர்வேல்,
*மேட்டுத்தெரு, ஆரணி சைதாப்பேட்டை.*

(4) P. கந்தசாமி முதலியார்,
*புருகேஸ்பேட்டை, திருப்பாதிரிப்புலியூர்*

(5) அங்கப்ப முதலி மகன் பழநியப்ப முதலி,
*குமாரமங்கலம், சேலம்ஜில்லா*

(6) T. A. பழநியப்பன் c/o வையாபுரி முதலியார்,
*வாளப்பாடி P. O., சேலம் ஜில்லா*

(7)வ. கு. அ. ந. அர்த்தநாரி முதலியார்,
*ஜவுளி வியாபாரம், பவானி*

(8) N. முத்துச்சாமிப் பிள்ளை,
*பள்ளேகவுண்டன் புதூர், கோவை ஜில்லா*

(9) S. தங்கச்சாமி முதலியார்,
*மேலைத்தெரு, பரமகுடி*

(10) S. பாலையா,
*மெக்கானிக், புளியம்பட்டி, அருப்புக்கோட்டை*

(11) C. K. வீரமுத்து முதலியார்.
*மலைக்கோவில், திருச்சி ஜில்லா*

(12) வெ. ராமசாமி முதலியார்,
*கிடங்கு குமஸ்தா, மேட்டுப்பாளையம், கோவை*

(13) B. G. முதலியார்
*கவுதாலம் P. O. ஆதோணி, பெல்லாரி*

(14) ஆ. கு. பெரியசாமி C/o P. மாரியப்பப் பிள்ளை
*ஜவுளி, வெல்லிங்டன், நீலகிரி*

(15) S. ராஜலிங்கம்
*ஜோஜேபோலோ அண்டு சன்ஸ், டாங்ரா ரோட், கல்கத்தா.*

(16) R. சின்னத்தம்பிப் பிள்ளை,
*திருக்கோணமலைத் தெரு, கண்டி, சிலோன்*

# ரொக்கப் பரிசு ரூ. 250

## அதிக எழுத்துப் போட்டி 2

முதற் பரிசு (சரியான விடைக்கு) ரூ. **150**

**2-வது பரிசு** (ஒரு தப்புள்ள விடைக்கு) ரூ. **75**

**அதிக விடைகள் அனுப்புகிறவர்களுக்கு 2 பரிசுகள் ரூ. 25**

பிரவேசக் கட்டணம் அணா 2

**'விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:**—கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் சில எழுத்துக்கள் அதிகமாய்ப் போடப்பட்டுள்ளன. குறிப்பைக் கொண்டு சரியான வார்த்தைகளைக் கண்டுபிடித்து அதிகமாயுள்ள எழுத்துக்களை அடித்துவிட வேண்டும். அவ்வாறு அடிக்கப்படும் எழுத்துக்கள் ஒன்றின்பின் ஒன்றாக வரிசையாக அடிக்கப்பட்டிருக்கவேண்டும்.

உதாரணம்:—முதல் வரிசையில் காணப்படுவது **வற்றுப் பெருங் கலை** என்பது. அதற்குக் குறிப்பில் **ராமர் காடு சென்றபோது தரித்துச் சென்றது** என்றிருப்பதைக் கொண்டு பார்த்தால் **வற்றுப் பெருங்கலை** எனபதற்குச் சரியான வார்த்தை **வற்கலை** என அறியலாம். இதே மாதிரி மற்ற சரியான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

## அதிக எழுத்துப் போட்டி இரண்டின் வார்த்தைகள்

1. வற்றுப் பெருங்கலை
2. ஆலமுண்ட் காலம்
3. பரலோக அரணம்
4. சுருங்கத்திடை அருகல்
5. பாரதிக் கநாமகள்
6. நத்தம் மிதந்து
7. மாயா பிரகிருதி
8. அரியச் சுவம்
9. முசிய கஞ்சி

**குறிப்புகள்:**—(1) ராமர் காடு சென்றபோது தரித்துச் சென்றது, (2) திருப்பாற்கடலில் தோன்றியது, (3) வீரர்கள் போரில் அணிந்து செல்வது, (4) குறைதல், (5) பிரமன் மனைவி, (6) சங்கு, (7) பஞ்சபாண்டவரில் ஒருவன், (8) குதிரை, (9) முகம்.

### நிபந்தனைகள்

(1) 'செங்குந்த மித்திரன் கூப்பனில் விடைகளை எழுதி யனுப்ப வேண்டும். கூப்பன் கிடைக்காதவர்கள் பிரவேசக் கட்டணத்தோடு ஒவ்வொரு கூபனுக்கும் கூப்பன் கிரயமான இரண்டணா சேர்த்து அனுப்பவேண்டும்.

(2) ஒருவர் எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக்கட்டணம் அணா இரண்டு அனுப்பவேண்டும்.

(3) ஒவ்வொரு விடை கூப்பனிலும், மணியார்டர் கூப்பனிலும் விடை அனுப்புகின்றவரின் முழு விலாசமும் தெளிவாய் எழுதி யிருக்கவேண்டும்.

(4) பத்திராதிபரின் விடைக்கு எழுத்துக்கு எழுத்து சரியாயிருக்கும் விடைக்கு முதற் பரிசும், அடுத்தபடி சரியாயிருக்கும் விடைக்கு இரண்டாவது பரிசும் தரப்படும். மற்றவர்களைக் காட்டிலும் மிக அதிகமான விடைகள் அனுப்புகிறவருக்கு ரூ. 15 ஸ்பெஷல் பரிசும், அதற்கடுத்து அதிக விடை அனுப்புகிறவருக்கு ரூ. 10 ஸ்பெஷல் பரிசும் அளிக்கப்படும். ஒரே பரிசில் ஒருவர் எத்தனை விடைகள் சரியாக எழுதியிருந்தாலும் அந்தப் பரிசில் அவருக்கு ஒரே பரிசுதான் அளிக்கப்படும். உதாரணமாக ஒருவர் ஒரு தப்புள்ள விடை ஐந்தும் சரியான விடை ஒன்றும் அனுப்பியிருந்தால் இரண்டாவது பரிசு ஒன்றும், முதல் பரிசு ஒன்றும் கிடைக்கும்.

(5) விடைகள் 10-2-35-க்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். அதற்குப் பின் வந்து சேர்பவைகள் கவனிக்கப்படமாட்டா. பிரவேசக் கட்டணமோ, கூப்பன் கிரயமோ இல்லாத விடைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டா.

விடைகள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

'அதிக எழுத்துப் போட்டி' 2.

செங்குந்த மித்திரன் ஆபீஸ், பவழக்காரத்தெரு, சென்னை.

---

# அதிக எழுத்துப் போட்டி 2

**விடை கூபன்**

முடிவு தேதி (10-2-35)

1. வற்கலை
2.
3.
4.
5.
6.
7.
8.
9.

208452

பத்திராதிபர் தீர்ப்பை முடிவானதென ஒப்புக்கொள்கிறேன்.

பெயர்.........................................

விலாசம்.........................................

.........................................